Find us on facebook/tamilmirror    Follow us on tamilmirror    epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk

FRIDAY, AUGUST 01 2025


வெள்ளிக்கிழமை 01, ஓகஸ்ட் 2025 | ஒளி: 10 கதிர் 296 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE



# ரோஹிதவின் மகளுக்கு பிணை

பரபரப்பை ஏற்படுத்திய லேண்ட் குரூசர் ஜீப்பை விற்றதற்காக கைது செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தனவின் மகள் ரோஷல் மெலனி அபேகுணவர்தன, தலா 2 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள இரண்டு சரீரப் பிணைகளில் மத்துகம பிரதான நீதவான் ஏ.ஐ. ஹெட்டிவத்த உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2



# “நீதிமன்ற கட்டமைப்பு டிஜிட்டல் மயமாகும்”


## சம்பிரதாய வரவேற்பு நிகழ்வில் புதிய நீதியரசர் தெரிவிப்பு

நாடு முழுவதும் நீதிமன்ற கட்டமைப்பை டிஜிட்டல் மயமாக்குவதை விரைவுபடுத்தத் திட்டமிட்டுள்ளதாகப் புதிதாக நியமிக்கப்பட்ட பிரதம நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேன, வியாழக்கிழமை (31) அன்று தெரிவித்தார்.

நீதி நிர்வாகத்தில் தொழில்நுட்ப ரீதியாக மேம்பட்ட முறைகளைப் பின்பற்ற வேண்டிய நேரம் வந்துவிட்டது என்றும் வலியுறுத்தினார்.

இலங்கையின் 49ஆவது பிரதம நீதியரசரை வரவேற்கும் சம்பிரதாய நிகழ்வு, உயர் நீதிமன்றத்தில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



# எசல பெரஹெராவில் டிரோன் பறக்க தடை

கண்டி எசல பெரஹெராவின் போது, அனைத்து ட்ரோன் செயல்பாடுகளையும் தற்காலிகமாக நிறுத்தி வைப்பதாக இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து ஆணையம் (CAASL) அறிவித்துள்ளது. ஆயிரக்கணக்கான பக்தர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வருடாந்திர மத மற்றும் கலாசார நிகழ்வின் போது பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதை இந்த இடைநிறுத்தம் நோக்கமாகக் கொண்டுள்ளது என்று ஆணையம் தெரிவித்துள்ளது. ஜூலை 30 திகதி ஆரம்பமான எசல பெரஹெரா ஆகஸ்ட் 9ஆம் திகதி வரை நடைபெறும்

இந்த உத்தரவை கண்டிப்பாகக் கடைப்பிடிக்குமாறும், பெரஹெரா காலம் முழுவதும் நியமிக்கப்பட்ட பகுதிக்குள் ஆளில்லா வான்வழி வாகனங்களை (UAV) பறப்பதைத் தவிர்க்குமாறும் பொதுமக்களையும் ட்ரோன் இயக்குபவர்களையும் ஆணையம் வலியுறுத்தியுள்ளது. விதிமுறைகளை மீறுபவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

# நாடு திரும்பினார் ஜனாதிபதி அனுர



மாலைத்தீவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை வெற்றிகரமாக நிறைவு செய்து, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க புதன்கிழமை (30) இரவு நாடு திரும்பினார்.

மாலைத்தீவு ஜனாதிபதி கலாநிதி முகமது முய்சுவின் (Dr. Mohamed Muizzu) அழைப்பின் பேரில் ஜனாதிபதி இந்த உத்தியோகபூர்வ விஜயத்தை கடந்த 28 ஆம் திகதி ஆரம்பித்த மேற்கொண்டார்.

இந்த உத்தியோகபூர்வ விஜயத்தின் போது, ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, ஜனாதிபதி கலாநிதி முகமது முய்சுவுடனும் மாலைத்தீவு அமைச்சரவை அமைச்சர்கள் உட்பட அரச பிரதானிகளுடன் பரஸ்பர முக்கியத்துவம் வாய்ந்த இருதரப்பு, பிராந்திய மற்றும் சர்வதேச பிரச்சினைகள் குறித்து விரிவான கலந்துரையாடல்களையும் நடத்தினார்.

இலங்கைக்கும் மாலைத்தீவுக்கும் இடையிலான பரஸ்பர சட்ட உதவி வழங்கல் தொடர்பான ஒப்பந்தம் மற்றும் மாலைத்தீவு வெளியுறவு சேவை நிறுவனம் (FOSIM) மற்றும் பண்டாரநாயக்க சர்வதேச இராஜதந்திர பயிற்சி நிறுவனம் ஆகியவற்றுக்கு இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் என்பனவும் பரிமாறப்பட்டன.

தொடர்ச்சி P2

### புலிகளின் ஆயுதங்களை

# வாடகைக்கு விட்டிருந்த மூவருக்கு தடுப்புக்காவல்

போரின்போது, சேகரிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் ஆயுதங்களை மறைத்து, தெற்கில் உள்ள பாதாள உலக உறுப்பினர்கள் மற்றும் குற்றவாளிகளுக்கு வாடகைக்கு கொடுடுத்ததாகக் கூறப்படும் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்

வவுனியா, நேரிகுளம் பகுதியைச் சேர்ந்த மூன்று சந்தேக நபர்களையும் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவில் 03 மாத காலத்திற்குத் தடுத்து வைத்து விசாரிக்க கொழும்பு மேலதிக நீதவான் பசன் அமரசேன உத்தரவிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

### தர்மச் சக்கர விவகாரம்:

# மஸாஹிமாவுக்கு நீதி கிடைத்தது



தர்மச் சக்கரம் வரையப்பட்ட ஆடையை அணிந்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மஸாஹிமாவுக்கு புதன்கிழமை (30) அன்று நீதி கிடைத்தது.

ஈஸ்டர் தாக்குதலைத் தொடர்ந்து தர்மசக்கர புகைப்படம் கொண்ட ஆடை (கப்டான்) அணிந்திருந்தார் என்ற

தொடர்ச்சி P2

### பொலிஸ் சேவையில்

# 1,000 பெண் உத்தியோகத்தர்கள்



பொலிஸ் சேவையில் பெண் உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்வதற்கு தீர்மானித்துள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



### மன்றம், சம்மேளனங்களை

# “ஜே.வி.பியின் கிளையாக்க முயற்சி”

வெளிப்படைத்தன்மையுடனும் பாரபட்சமற்ற முறையிலும் இதுவரை காலமும் செயற்பட்டு வந்த மன்றத்தையும், சம்மேளனத்தையும் பூரணமாக அரசியல் மயமாக்கி வருகின்றனர் என குற்றஞ்சாட்டிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, இளைஞர் சேவைகள் மன்றத்தையும், இளைஞர் சம்மேளன பிரதேச சம்மேளனங்களையும் மக்கள் விடுதலை முன்னணியின் நிரந்தரக் கிளையாக மாற்றுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன என்றார்.

தொடர்ச்சி P2

# நாவலப்பிட்டி விபத்தில் மனைவி நசுங்கி பலி

## கணவனுக்கு காயம்: சாரதி கைது



*மலையக நிருபர்கள்*

மருதானையில் இருந்து நாவலப்பிட்டி நோக்கி பயணித்த தம்பதியினர் மோட்டார் சைக்கிள் விபத்தில் சிக்கியதில், மனைவி சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாகவும், மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்ற கணவர் படுகாயமடைந்து நாவலப்பிட்டி மாவட்ட பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் கினிகத்தேனை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தொடர்ச்சி P2

# முஸ்லிம் பெண்களின் கலாசார ஆடைகளை அகற்ற பணிப்புரை

## இம்ரான் மகரூப் எம்.பி. கடும் எதிர்ப்பு



*அபு அலா*

சுகாதாரத் துறையில் பணி புரியும் முஸ்லிம் பெண் ஊழியர்கள் அணியும் கலாச்சாரம் சார்ந்த ஆடைகளை அகற்றுமாறு திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்

தொடர்ச்சி P2



# நித்திரையில் இருந்தவர் துப்பாக்கிச் சூட்டில் மரணம்

கொஸ்கொட, துவேமோதரவில் வியாழக்கிழமை (31) காலை நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் அதே பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயது இளைஞர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்


# “நீதிமன்ற கட்டமைப்பு டிஜிட்டல் மயமாகும்”

முன்மொழியப்பட்ட டிஜிட்டல் மயமாக்கல் முயற்சி தொடர்பாக இலங்கை வழக்கறிஞர்கள் சங்கத்தின் (BASL) தலைவருடன் ஏற்கனவே பலமுறை கலந்துரையாடல்களை நடத்தியுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

அதற்கு மேலதிகமாக, டிஜிட்டல் முறையை செயல்படுத்துவது குறித்து விவாதிக்க நீதி அமைச்சர் மற்றும் நீதி அமைச்சின் செயலாளருடன் சந்திப்புகளை நடத்தியுள்ளதாகவும், இதை நாடு முழுவதும் ஆவலுடன் எதிர்பார்க்கிறது என்றும் அவர் கூறினார்.

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதம நீதியரசருக்கு, உயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் நீதியரசர்கள், மேல் நீதிமன்றங்கள், மாவட்ட நீதிமன்றங்கள் மற்றும் நீதவான் நீதிமன்றங்களின் நீதிபதிகள் குழு, சம்பிரதாய அமர்வில் அன்பான வரவேற்பு அளித்தனர்.

# ரோஹிதவின் மகளுக்கு பிணை




நீதிமன்றத்தில் ஆஜராவதை பல நாட்களாக தவிர்த்து வந்த சந்தேக நபர், பாணந்துறை வாலன ஊழல் தடுப்புப் பிரிவில் புதன்கிழமை (30) சரணடைந்து, வாக்குமூலம் வழங்கினார். அவர், நீதிமன்றத்தில் வியாழக்கிழமை(31) ஆஜர்படுத்தப்பட்டார்.

ஜீப் தொடர்பாக சந்தேக நபரான ரோஷல் மெலனி அபேகுணவர்தனவின் கணவர் தனுஷ்க பிரியதர்ஷன, ஆகஸ்ட் 1 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஜீப்பை வாங்கிய பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் விதானவின் மகன் ரசிக விதான, தலா 1 மில்லியன் ரூபாய் மதிப்புள்ள இரண்டு சரீரப் பிணைகளில் ஏற்கெனவே விடுவிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நாடு திரும்பினார் ஜனாதிபதி அனுர

‘குரும்பா மோல்டீவ்ஸ்’ விடுதியில் ஜனாதிபதிக்கு மாலைத்தீவு ஜனாதிபதி கலாநிதி முகமது முய்சு விசேட இராப்போசன விருந்துபசாரம் அளித்தார்.

மாலைத்தீவு மற்றும் இலங்கைக்கு இடையே இராஜதந்திர உறவுகள் நிறுவப்பட்டதன் 60ஆவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் தலைநகர் மாலேயில் உள்ள சுல்தான் கார்டனில் ஜனாதிபதி மரக்கன்றொன்றை நட்டார்.

# 1,000 பெண் உத்தியோகத்தர்கள்

அதன்படி 1,000 பெண் உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்வதற்கான வர்த்தமானி அறிவித்தல் அடுத்த வாரத்தில் வெளியிடப்படும் என அமைச்சர் ஆனந்த விஜேபால கூறியுள்ளார்.

அத்துடன், 5,000 பொலிஸ் உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்வதற்கான நேர்முகப்பரீட்சைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் சேவையில் நிலவும் 10,000 வெற்றிடங்களை நிரப்பும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# மஸாஹிமாவுக்கு நீதி கிடைத்தது



குற்றச்சாட்டில் மஹியங்கனை, ஹஸலகவை சேர்ந்த மஸாஹிமா கைது செய்யப்பட்டு சிறைவாசம் அனுபவித்தார்.

ஆனால் இவர் கப்பலின் சுக்கான் கொண்ட புகைப்படம் வரையப்பட்ட ஆடையைத் தான் அணிந்தார்.

இந்நிலையில், பின் நாட்களில் விடுதலையான சகோதரி மஸாஹிமா தனது அடிப்படை மனித உரிமை மீறப்பட்டதாகக் கூறி உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். தொடர்ந்து நடைபெற்று வந்த வழக்கு விசாரணையின் தீர்ப்பு புதன்கிழமை (30) அன்று வெளியானது.

நீதியரசர்களான யசந்த கொடேகொட, குமுதினி விக்கிரமசிங்க, ஷிரான் கொனேரத்ன ஆகியோர் அடங்கிய அமர்வு இன்று தீர்ப்பை வெளியிட்டது.

அதற்கமைய, அரசியலமைப்பில் உள்ள அடிப்படை உரிமைகள் மஸாஹிமா விவகாரத்தில் மீறப்பட்டுள்ளது என்பதை உயர் நீதிமன்றம் உறுதிப்படுத்தியதுடன் அப்போதைய ஹஸலக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி OIC ஜெ.பி.ஷந்தன நிஷாந்த தனது சொந்த நிதியிலிருந்து 30 ஆயிரம் ரூபாய் நஷ்டஈட்டுத் தொகையை பாதிக்கப்பட்டவருக்கு வழங்க வேண்டும் எனவும் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

வழக்கு செலவுகளை அரசு வழங்க வேண்டும் எனவும் தீர்ப்பு வழங்கியது.

4 ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்ற குறித்த வழக்கில் சட்டத்தரணி பாத்திமா நுஷ்ராவின் வழிகாட்டலில் சட்டத்தரணி புலஸ்தி ஹேவமன்ன, சட்டத்தரணி ஹரினி ஜயவர்தன, சட்டத்தரணி இர்பானா இம்ரான் ஆகியோர் பாதிக்கப்பட்டவர் சார்பில் மன்றில் ஆஜராகினர்.

# முஸ்லிம் பெண்களின் கலாசார ஆடைகளை அகற்ற பணிப்புரை

வழங்கியுள்ள பணிப்புரையை ஏற்றுக்கொள்ள முடியாதென திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், “திருகோணமலையிலுள்ள வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்களில் கடமையாற்றும் முஸ்லிம் தாதியர்கள், மருத்துவ மாதுக்கள் மற்றும் சிற்றூழியர்கள் இனிமேல் கலாச்சார ஆடை அணிந்து கடமைக்கு வரக்கூடாது என பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகப் பாதிக்கப்பட்ட அலுவலர்கள் எனது கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளனர்.

தாங்கள் கடமை ஏற்றது முதல் தற்போது ஓய்வூதியம் பெறும் வயதை அடைந்துள்ள இதுவரையான காலத்தில் எங்களது சீருடையுடன் கலாச்சார உடையும் சேர்த்து அணிந்தே சென்றே எங்களின் கடமைகளை முன்னெடுத்து வருகிறோம். ஆனால், தற்போது கலாச்சார உடை அணிந்து கடமைக்கு வரக்கூடாது என்றும் இதை மீறும் உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் எமக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது என்றும் இவ்விடயத்தினை கவனத்தில் எடுத்து எமக்கு நியாயம் பெற்றுத் தாருங்கள் என்று பாதிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் என்னிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இனவாதம் இல்லாத ஆட்சி என்று மேடைக்கு மேடை கூறிக்கொள்ளும் இந்த அரசாங்க காலத்தில் எந்த ஆட்சியிலும் இல்லாத வகையில் முஸ்லிம் பெண்களின் ஆடை விடயத்தில் இனவாத போக்கைக் கையில் எடுத்துள்ள அரச அதிகாரிகளுக்கு எதிராக இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா அல்லது இந்த உத்தரவின் பின்னால் இந்த அரசாங்கம் தான் உள்ளதா என்ற சந்தேகம் உருவாகிறது.

குறித்த பதவிகளுக்குரிய சீருடைக்கு மேலதிகமாக முஸ்லிம் பெண் ஊழியர்கள் தமது கலாச்சார ஆடைகளை காலாகாலமாக அணிந்து வருகிறார்கள். இதனை இப்போது அகற்ற சொல்வது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது.

இந்த உத்தரவை வாபஸ் பெறப்படவேண்டும். இனவாதத்தை தற்போது கையில் எடுத்துள்ள அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசாங்கம் இந்த விடயத்தைக் கவனத்தில் எடுத்து நடவடிக்கை எடுக்கும் என எதிர்பார்க்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

# நித்திரையில் இருந்தவர் துப்பாக்கிச் சூட்டில் மரணம்

மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு அடையாளம் தெரியாத துப்பாக்கிதாரிகள், அந்த இளைஞன் தனது வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தபோது துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

வியாழக்கிழமை (31) அதிகாலை 5 மணியளவில் இந்த துப்பாக்கிச் சூடு நடந்திருக்கலாம் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில், கொஸ்கொட பகுதியில் ஆமை பாதுகாப்பு மையத்தை நடத்தி வரும் ஒருவர் என பொலிஸார் கூறியுள்ளனர்.

கொஸ்கொட துவேமோதர இளைஞனைக் கொலை செய்யப் பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் மோட்டார் சைக்கிள் இந்துருவ அதுருவெல்ல பாலத்தின் அடிவாரத்தில் கைவிடப்பட்ட நிலையில் கண்டெடுக்கப்பட்டதாக கொஸ்கொட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இளைஞனைக் கொலை செய்தவர்களை அடையாளம் காண தகவல் தேடும் போது, ஒரு அநாமதேய தொலைபேசி அழைப்பைத் தொடர்ந்து இந்துருவ அதுருவெல்ல பாலத்தின் அடிவாரத்தில் கைவிடப்பட்ட நிலையில் மோட்டார் சைக்கிள் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கண்டுபிடிக்கப்பட்ட மோட்டார் சைக்கிள் பல்சர் என்றும் கொஸ்கொட இளைஞனைக் கொலை செய்யப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள்தானா என்பதைத் தீர்மானிக்க விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளதாகவும் இதற்காக சாலையின் இருபுறமும் உள்ள நிறுவனங்கள் மற்றும் வீடுகளில் உள்ள சிசிரிவி கேமரா தரவுகள் பயன்படுத்தப்படும் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# நாவலப்பிட்டி விபத்தில் மனைவி நசுங்கி பலி

இந்த விபத்தில் உயிரிழந்தவர் மருதானைச் சேர்ந்த 44 வயதுடைய இரண்டு குழந்தைகளின் தாயார் நை ஜனிரா ஸ்னாய் ஆவார்.

நாவலப்பிட்டி மாவட்ட பொது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் உறவினரைப் பார்க்க இந்த தம்பதியினர் மோட்டார் சைக்கிளிலில் வியாழக்கிழமை (31) அன்று பயணித்துக் கொண்டிருந்தனர்.

ஹட்டன்-கொழும்பு பிரதான சாலையில் உள்ள மில்லகஹமுல பகுதியில் கொழும்பிலிருந்து வட்டவளை நோக்கிச் சென்ற லாரி, வளைவுப் பகுதியில் மோட்டார் சைக்கிளை கவனக்குறைவாக முந்திச் செல்ல முயன்றது. மோட்டார் சைக்கிள் சறுக்கி கவிழ்ந்ததில், மோட்டார் சைக்கிளின் பின்னால் அமர்ந்து பயணித்த மனைவி லாரியின் பின் சக்கரத்தின் கீழ் நசுங்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். லாரியின் ஓட்டுநர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

# குடு மாலியின் மகள் படுகொலை: இருவர் கைது

போதைப்பொருள் குற்றச்சாட்டில் நீதிமன்றத்தால் பல முறை தண்டிக்கப்பட்ட குடு மாலி என்ற பெண்ணின் மகளை படுகொலைச் செய்த மற்றும் அந்த பெண்ணின் மகனுக்கு படுகாயங்களை ஏற்படுத்திய குற்றச்சாட்டில் இருவர், வியாழக்கிழமை(31) அன்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

பங்கதெனிய மற்றும் பல்லம ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 26 மற்றும் 33 வயதுடையவர்கள் இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த துப்பாக்கி பிரயோகத்துக்கு பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள், மாதம்பே இரட்டகுளம் பகுதியில் உள்ள ஒரு கழிவறையில் தாழ்த்தப்பட்டிருந்த நிலையில் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

மாரவில, மாரடை பகுதியில், செவ்வாய்க்கிழமை(22) ஆம் திகதி இரவு முச்சக்கர வண்டியில் பயணித்துக்கொண்டிருந்த போது, மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவரினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் இரண்டு குழந்தைகளின் தாய் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததார். அவரது மூத்த குழந்தை படுகாயமடைந்தது.

கொலை செய்யப்பட்டவர் மாரவில, மாரடை பகுதியைச் சேர்ந்த எதிரிசிங்க ஆராச்சிகே வசந்தி சதுராணி எனப்படும் சதாமாலி என்ற 30 வயதுடைய பெண்ணாவார். இறந்தவர், மாரவில மாரடை பகுதியில் பிரபல ஹெரோய்ன் மற்றும் பிற போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட குடு மாலி என்ற பெண்ணின் மூத்த மகள் என்று கூறப்படுகிறது.

குடு மாலி என்ற பெண், போதைப்பொருள் குற்றச்சாட்டில் நீதிமன்றத்தில் தண்டிக்கப்பட்டு பல முறை போதைப்பொருள் குற்றச்சாட்டில் சிறையில் அடைக்கப்பட்ட ஒரு பெண் என்றும் கூறப்படுகிறது.

அதே நேரத்தில், குடு மாலியின் மூன்று மகள்களும் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டவர்கள் என்றும் கூறப்படுகிறது. கொலை செய்யப்பட்ட பெண்ணும் போதைப்பொருள் குற்றச்சாட்டில் சிறையில் அடைக்கப்பட்டு சமீபத்தில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

# “ஜே.வி.பியின் கிளையாக்க முயற்சி”

Citizen Voice (மக்கள் குரல்) வேலைத்திட்டத்தின் கீழ் இளைஞர் சம்மேளன உறுப்பினர்களுடன் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் புதன்கிழமை (30) அன்று நடைபெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு கருத்தும் தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு குறிப்பிட்டார்.

இனம், மதம், சாதி, வர்க்கம் மற்றும் கட்சி அடிப்படையில் எந்த பாகுபாடும் இல்லாமல், கிராமப்புறத்தில் இருந்து, மாகாணம், மாவட்டம் மற்றும் தேசிய மட்டங்களுக்கு, கீழ் மட்டத்திலிருந்து மேல் மட்டம் வரை ஜனநாயக ரீதியாக முன்னேறி வந்த, தேசிய மட்டங்களில் கால் பதித்த நமது நாட்டின் இளைஞர்களுக்காகத் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் இதுவரை காலமும் செயல்பட்டு வந்திருக்கிறது.

> **“தேசிய இளைஞர் சேவை மன்றம், தேசிய இளைஞர் சம்மேளனம் ஆகியவற்றைச் சேர்ந்த சுயாதீனமாக செயல்படும் இளையோர்களை தமது அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தி ஜேவிபியிற்கு கீழ்ப்படிதல் காணப்படும் அடிவருடிகளாக மாற்றும் வெட்கக்கேடான அரசியல் போக்கை நாம் நிராகரிக்கிறோம்**

இளைஞர் யுவதிகள் தங்கள் திறமைகள், ஆற்றல்கள், சேவைகள் மற்றும் செயல் முனைப்பு மூலம் கீழ் மட்டத்தில் இருந்து மேல் மட்டம் நோக்கி முன்னேறும் வாய்ப்பைத் தந்து கொண்டிருந்த தேசிய இளைஞர்கள் சேவைகள் மன்றத்துக்கு இன்று அரசியல் தடையாக அமைந்து காணப்படுகின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

தேசிய இளைஞர் சேவை மன்றம், தேசிய இளைஞர் சம்மேளனம் ஆகியவற்றைச் சேர்ந்த சுயாதீனமாக செயல்படும் இளையோர்களை தமது அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தி ஜேவிபியிற்கு கீழ்ப்படிதல் காணப்படும் அடிவருடிகளாக மாற்றும் வெட்கக்கேடான அரசியல் போக்கை நாம் நிராகரிக்கிறோம். இளைஞர் கழகங்களினது முன்னாள் உறுப்பினர்கள், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற முன்னாள் உறுப்பினர்கள், இளைஞர் சம்மேளன முன்னாள் உறுப்பினர்களை ஒரே கூடையின் கீழ் ஒன்று திரட்டி, இளைஞர்களினது சுயாதீன செயல்பாட்டுக்கு இடமளிக்கும் ஜனநாயகப் போராட்டத்தை முன்னெடுப்போம் என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

# வாடகைக்கு விட்டிருந்த மூவருக்கு தடுப்புக்காவல்

சந்தேக நபர்களான காரியக் பெரமல் ரமேஷ், அந்தோணி பெர்னாண்டோ விக்ரம மற்றும் முகமது ராசிக் ஆகியோரையே தடுத்து வைத்து விசாரிக்க உத்தரவிடப்பட்டுள்ளது

முன்வைத்து, கிரிபத்கொடை பொலிஸ் பிரிவில் கடந்த 21ஆம் திகதி கைது செய்யப்பட்ட ஒரு சந்தேக நபரிடமிருந்து T-56 துப்பாக்கி, 30 தோட்டாக்கள் அடங்கிய வெடிமருந்து மற்றும் 05 கிராம் 650 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் கண்டுபிடிக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டதாகப் பயங்கரவாத புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள், நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளனர்.

தொடர்புடைய துப்பாக்கி, வவுனியாவிலிருந்து கொழும்பு பகுதிக்கு கொண்டு வரப்பட்டதாகவும், விசாரணைகளில் துப்பாக்கி வேறொரு தரப்பினருக்கு வழங்கப்பட்டு, குற்றம் செய்த பின்னர் வவுனியாவுக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில், வவுனியா பிரிவு குற்றப் புலனாய்வுப் பணியகத்தின் அதிகாரிகள் குழு, சந்தேக நபருடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்த மூன்று சந்தேக நபர்களை செட்டிகுளம் பொலிஸ் பிரிவின் நேரியகுளம் பகுதியில் கைது செய்ததாக அவர் கூறினார்.

பல்வேறு வகையான 86 கைக்குண்டுகள், T-56க்கு 321 வெடிமருந்துகள், 03 பக்கவாட்டு வெடிமருந்துகள் மற்றும் 5,600 போதைப்பொருள் காப்ஸ்யூல்கள் ஆகியவற்றை சந்தேக நபர்களில் ஒருவரின் வீடு மற்றும் தோட்டத்தில் மறைத்து வைத்திருந்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த ஆயுதங்கள் போரின் போது விடுதலைப் புலிகளால் சேகரிக்கப்பட்டு மறைத்து வைக்கப்பட்டு தெற்கில் குற்றங்களைச் செய்யப் பயன்படுத்தப்பட்டனவா? அல்லது தெற்கில் உள்ள குற்றவாளிகள் மற்றும் பாதாள உலகக் கும்பல் உறுப்பினர்களுக்குப் பணம் சேகரிக்க வாடகைக்கு விடப்பட்டதா? சந்தேக நபர்களைத் தடுத்து வைத்து விசாரிக்க அனுமதி கோரினார்.

முன்வைக்கப்பட்ட உண்மைகளைக் கருத்தில் கொண்ட மேலதிக நீதவான், சந்தேக நபர்களைத் தடுத்து வைத்து விசாரிக்க அனுமதி வழங்கினார், மேலும் அவர்களின் வங்கிக் கணக்கு விவரங்களையும் பரிசீலிக்குமாறு உத்தரவிட்டார்.



# ஆயிரக்கணக்கான வாழ்வாதாரங்களை அறிமுகம் செய்த முகம்

இலங்கை சிறுத்தைகள் தினத்தில், வெறுமனே வேட்டையாடும் ஒரு உயிரினத்தை மட்டும் நாம் கௌரவப்படுத்தவில்லை. மாறாக எமது பொருளாதாரத்திற்கு அமைதியான முறையில் பங்களிப்பு செய்கின்ற இலங்கை சிறுத்தைகளையே கொண்டாடுகின்றோம்.

அழகிய யால வனப் பகுதி முதல் மலைநாட்டின் அடிவாரங்கள் வரையான பகுதிகளுக்கு பொருளாதார ரீதியாக சிறுத்தைகள் பங்களிப்பு செய்கின்றன. தேசிய பூங்காக்கள், ஹோட்டல்கள், சுற்றுலா வழிகாட்டிகள், ஜீப் ஓட்டுநர்கள், புகைப்படக் கலைஞர்கள், கைவினைஞர்கள் போன்று பல்வேறு சமூகத்தவரும் சிறுத்தைகளால் பயனடைகின்றனர். சிறுத்தைகளின் அழகால் பலர் ஈர்க்கப்படுவதால் உள்நாட்டு வியாபாரங்கள் செழிக்கின்றன. அத்துடன் விவசாயம், சுற்றுலா ஆகிய இரண்டும் சார்ந்துள்ள எமது சுற்றுச்சூழல் அமைப்புகளின் சமநிலையைப் பராமரிப்பதில் ஆற்றும் பணியும் முக்கியமானது.

சிறுத்தைகள் உயிரிழக்கும்போது அதனை வெறும் இயற்கையின் சோகமாக மட்டும் பார்க்க இயலாது. தேசிய பொருளாதாரத்திற்கும் அது இழப்பாகும். ஒரு சிறுத்தையின் உயிரிழப்பால் ரூ. 41 மில்லியன் வருமானம் இழக்கப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.* இது வெறுமனே ஒரு புள்ளிவிவரம் மட்டுமல்ல. இது வாழ்வாதாரத்திற்கான இழப்பு என்பதுடன் சமூகங்களையும் பாதிக்கின்றன.

சிறுத்தைகள் பாதுகாக்கப்பட்ட பகுதிகளுக்கு வெளியே கொல்லப்படும் சம்பவங்கள் தற்போது பதிவாகின்றன. சிறுத்தைகள் உண்மையில் அச்சுறுத்தலை எதிர்கொண்டு வருகின்றதுடன் இது வளர்ந்து வரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. WNPS LOLC பல - பிராந்திய சிறுத்தைகள் பாதுகாப்பு திட்டங்கள் ஊடாக, அவை அதிக ஆபத்திலுள்ள பகுதிகளை இனங்கண்டு அங்கு பாதுகாப்பு வழங்குவதற்கான கள பணிகளை முன்னெடுக்கின்றது.

சிறுத்தைகள் சார்ந்த சுற்றுலா காரணமாக பயனடைந்த வியாபார நிறுவனங்களையும், வர்த்தக நாமங்களையும் எம்முடன் இணையுமாறு அழைக்கின்றோம். இதுவொரு தொண்டு என்பதற்கு அப்பால், ஒரே நோக்கத்திற்காக ஒன்றிணையும் முயற்சியாகும்.

**பாராட்டுவதற்கு அப்பால், அர்த்தமுள்ள செயற்பாட்டுக்காக கைகோர்ப்போம்.**

சுற்றுச்சூழல் அமைப்பின் சமநிலைக்கு மட்டுமல்ல, நமது பொருளாதாரத்தையும் சமநிலைப்படுத்தும் தேசிய புதையலாக காணப்படுகின்ற சிறுத்தைகளின் எதிர்காலத்தை பாதுகாக்க வனவிலங்கு மற்றும் இயற்கைப் பாதுகாப்புச் சங்கத்தில் அங்கத்தவராகுங்கள். எமக்கு அநேக நன்மைகளை கொடுத்த சிறுத்தைகள் காடுகளிலிருந்து முற்றாக அழிந்து போவதற்கு முன்னர் அவற்றின் முகங்களை எமது கண்முன்னே கொண்டு வந்து அதனை பாதுகாப்போம்.

*யால தேசிய பூங்கா பிளொக் 1 இல் 2018 ஆம் ஆண்டு சிறுத்தைகள் சார்ந்த சுற்றுலாவிலிருந்து கிடைத்த வருடாந்த வருமானத்தின் அடிப்படையில் மதிப்பிடப்பட்டுள்ளது. (மூலம்: WNPS/சிறுத்தை பணிக்குழு ஆய்வு.)

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் 074 100 8488

August 1st Sri Lanka Leopard Day

# சமூக ஊடகங்களில் செல்லாமல் இருப்பதை ஒரு பழக்கமாக்குங்கள்

சமூக ஊடகங்களின் சூறாவளியால் உலகம் முழுவதும் அடித்துச் செல்லப்பட்டுள்ளது. நல்லது கெட்டது என்று ஒரு துளி சொல்லப்படுவது போல, மக்கள் அதை எவ்வாறு பயன்படுத்துகிறார்கள் என்பதைப் பொறுத்து சமூக ஊடகங்கள் நன்மைக்காகவோ அல்லது தீமைக்காகவோ பயன்படுத்தப்படலாம்.

இன்று, மக்களை சமூக ஊடகங்களில் பிணைக்கப் பயன்படுத்தப்படும் பல்வேறு தந்திரங்களால், அதற்கு அடிமைகளாக மாறும் பல்வேறு வயதுடையவர்கள் இறுதியில் மன அழுத்தத்திற்கும் பதட்டத்திற்கும் ஆளாகிறார்கள்.

இதேவேளை, டெலிகிராம் சமூக ஊடக கணக்கின் மூலம் பெண்கள் மற்றும் யுவதிகளின், ஆபாசப் படங்கள் விற்பனை செய்யப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் குறித்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகத் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அறிவித்துள்ளது,

வட்ஸ்அப் பயனர்களின் கணக்குகளுக்குள் ஊடுருவி, போலி அழைப்புகள் மற்றும் குறுஞ்செய்திகளை அனுப்பி பண மோசடி செய்யும் முயற்சிகள் குறித்து இந்த நாட்களில் அதிக எண்ணிக்கையிலான முறைப்பாடுகள் பதிவாகுவதாகக் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. ஆகையால் “OTP எண்களை வழங்க வேண்டாம்” என பயனர்களுக்குத் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

சமூக வலைத்தளங்களால், பாடசாலை வேலையைத் தவிர்க்கும் குழந்தைகள் மற்றும் அலுவலக ஊழியர்கள் தங்கள் பணிகளை சரியான நேரத்தில் முடிக்க முடியாமல் பாதிக்கப்படுகின்றனர்.

மேலும் சில நோய்களுக்கான மூலிகை பரிந்துரைகள் பற்றிய தவறான உண்மைகளால் ஏமாற்றப்பட்டவர்களும் பாதிக்கப்படுகின்றனர்.

சமூக ஊடகங்களில் ஒரு நாளைக்கு மூன்று மணி நேரத்திற்கும் மேலாக செலவிடுபவர்கள் மனச்சோர்வு மற்றும் பதட்டத்தால் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

சமூக ஊடகங்கள் மூலம் தங்களை மற்றவர்களுடன் ஒப்பிடுவது தன்னம்பிக்கை குறைவதற்கு வழிவகுக்கும். “எனது பதிவுக்கு இவ்வளவு விருப்பங்கள் கிடைத்ததா? அவருக்கு ஏன் எனது பதிவு பிடிக்கவில்லை?” இத்தகைய எண்ணங்கள் நல்ல மன ஆரோக்கியத்திற்கு ஒரு தடையாகும். சமூக ஊடகங்களும் தனிமை உணர்வுகளை ஏற்படுத்துகின்றன.

சமூக ஊடக பயன்பாடு கற்றல் திறனையும், உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தும் மூளையின் பகுதியையும் பாதிக்கிறது. சமூக ஊடகங்கள் ஒரு நபரின் நல்ல நடத்தையையும் சமூகத்தில் அவர்கள் நடந்து கொள்ளும் விதத்தையும் பாதிக்கலாம்.

உங்கள் மனதை ஆரோக்கியமாக வைத்திருக்கும்போது, சமூக ஊடகங்களை எவ்வாறு பயன்படுத்துவது? இந்த நாட்களில் வயது வித்தியாசமின்றி அனைவரும் இந்தக் கேள்விக்கான பதில்களைத் தெரிந்து கொள்ள வேண்டும். மோசமான மனநிலையை உருவாக்கும் பதில்கள் மற்றும் உறவுகளை அகற்றவும்.

மனதை அமைதிப்படுத்தும், ஆன்மீக குணங்களை வளர்க்கும் மற்றும் மகிழ்ச்சியைத் தரும் விஷயங்களைத் தேர்ந்தெடுக்கவும். இயற்கையின் அழகான காட்சிகள், முன்மாதிரியான கதாபாத்திரங்களைப் பற்றிய YouTube வீடியோக்கள், உங்களை சிரிக்க வைக்கும் பதிவுகள், அறிவை அதிகரிக்கும் தகவல்கள் போன்றவற்றை மட்டுமே பார்ப்பதை ஒரு பழக்கமாக்குங்கள்.

சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதில் நீங்கள் செலவிடும் நேரத்தை முடிந்தவரைக் குறைத்துக் கொள்ளுங்கள். சில நாட்களுக்கு சமூக ஊடகங்களில் செல்லாமல் இருப்பதை ஒரு பழக்கமாக்குங்கள் என்பதே எமது அறிவுறுத்தலாகும்.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.


பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

வேண்டுமென்றே ஒருவர் நெஞ்சத்தைப் படுமோசமாக வருத்தினாலும், அதைத் தனது சிந்தையில் ஏற்காமல் உதறுபவர்கள், உறுதியான வீரர்கள் என்றே கருதப்படுவார்கள்.

இல்லாத பழியை ஏற்க வேண்டிய அவசியம் இல்லை. ஒரு சின்ன விடயத்துக்கே மனம் பதறுபவர்கள், மிகப் பெரிய சதிகளுக்கு அச்சமின்றி முகம் கொடுப்பது சந்தேகமானதுதான். பழிசுமத்துவது சிலருக்கு, எளிதான காரியமாகவே இருக்கிறது.

தவறான வழியில் உருவரைப் வதைக்க எண்ணுவதுதன் பிரதிபலன், எய்தவரை மக்கள் தூக்கி எறிந்துவிடுவார்கள். தவறுகளை, எவரும் எப்படியும் செய்யலாம் என எண்ணுபவர்களை, இந்தச் சமூகம் தொடர்ந்து பார்த்துக்கொண்டிருக்காது. ஒரு சிலரினால், பலரின் நிம்மதியைக் குலைக்க முடியுமா?

எவருக்கும் எவரையும் தண்டிப்பதற்கும் அவமானப்படுத்துவதற்கும் உரிமை கிடையாது. மனிதர்க் எல்லா எதிர்ப்புகள், துரோகங்கள், அழிவுகள் மத்தியில் வாழவேண்டி இருக்கிறது. இந்த அனுபவங்களால் கிடைப்பது தெளவும் பெருவெற்றியும் என்பதே நிதர்சனம். இந்தச் சமூகம் தொடர்ந்து பார்த்துக்கொண்டிருக்காது. ஒரு சிலரினால், பலரின் நிம்மதியைக் குலைக்க முடியுமா?

-பருத்தியூர் பாலா.வயிரவநாதன்

## கடிதங்கள்

### மீராவோடை வடிகான்களின் அவல நிலை

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபைக்குட்பட்ட மீராவோடை பொதுச் சந்தை பகுதியில் காணப்படும் வடிகான்கள் அடைபட்டிருப்பதாலும், சுத்தப்படுத்தப்படாமல் இருப்பதாலும், அவை மோசமான நிலையில் உள்ளன.

இந்த வடிகான்களில் சேரும் குப்பைகளும், கழிவுகளும் அடைப்பை ஏற்படுத்தி, நீரோட்டத்தை தடுத்துள்ளது.

இதனால், தேங்கி நிற்கும் நீர் துர்நாற்றம் வீசுவதோடு, கொசுக்கள் உற்பத்தியாகி, சுகாதாரக் கேடுகளையும் ஏற்படுத்துகின்றன.

அத்தோடு, வடிகான்களுக்கு மூடிகள் போடப்படாமல் இருப்பதால் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் பெரும் ஆபத்தை எதிர்நோக்கிச் செல்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடுதல் கவனமெடுத்து இதனை சீர்செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் வேண்டிக் கொள்கின்றனர்.

- எச்.எம்.எம்.பர்ஸான்



தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ

பொருளாதார நெருக்கடியின் பின்னரான இலங்கை–31

# பசுமைப் புரட்சி; மீள் மதிப்பீடு

1966 மற்றும் 1970க்கு இடையில் இலங்கையின் பசுமைப் புரட்சி முயற்சியானது, சில குறிப்பிடத்தக்க சாதனைகளைச் செய்தது என்பதை மறுப்பதற்கில்லை. ஒரு ஏக்கருக்கான மொத்த உற்பத்தி அதிகரித்தமை, உற்பத்தித்திறன் அடிப்படையில் முன்னே;ற்றம் என்பன மறுக்க முடியாதவை என்றாலும், இதைத் தாண்டிய இதன் விளைவுகளையும் நோக்க வேண்டும். ஆகவே இந்த முயற்சி குறித்த மீள் மதிப்பீடு அவசியமாகிறது. இதற்குப் பின்வரும் கேள்விகளை எழுப்புவது பயன்தரும். ஏனெனில் சாதனைகள், பயன்படுத்தப்பட்ட உத்திகள் நிலையான சுயசார்பு விவசாயத்திற்கு அடித்தளம் அமைத்துள்ளனவா? பொருத்தமான நிறுவன சூழல் உருவாகியுள்ளதா? பொதுவான பண்ணை வருமானம் உயர்ந்துள்ளதா? தொழில்நுட்பக் கட்டுப்பாடுகள் மற்றும் மோசமான கலாசார நடைமுறைகளை நீக்குவதன் மூலம் குறுகிய காலத்தில் பெறப்பட்ட உற்பத்தி அதிகரிப்புகளை நீண்டகாலத்திற்கும் சாத்தியமாக்கவியலுமா? புதிய உத்திகள் பரவலாக்கப்பட்டு உள்நாட்டு விவசாய முறையோடு இணைக்கப்படாமல் அத்தகைய அதிகரிப்புகளைத் தக்கவைக்க முடியுமா?

1970ஆம் ஆண்டுக்குள் அரிசியில் 70^ தன்னிறைவு என்ற குறுகிய கால நோக்கத்தை நோக்கமாகக் கொண்ட விவசாய திட்டங்களானவை, ஒருபுறம் உள்ளீடுகளை (மேம்படுத்தப்பட்ட விதை வகைகள், உரங்கள் மற்றும் வேளாண் இரசாயனங்கள்) பயன்படுத்துவதன் மூலமும், மறுபுறம் விவசாய நடைமுறைகளில் மேம்பாடுகளைச் செய்வதன் மூலமும், இன்னொருபுறம் விவசாய நடைமுறைகளில் இயந்திர சக்தியைப் பயன்படுத்துவதன் மூலமும் அடையப்பட வேண்டும் என எதிர்பார்த்தது. மேம்படுத்தப்பட்ட விதையை இது முக்கியமாக நம்பியிருந்தது. இந்தக் காலகட்டத்தில் பல விவசாயிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உள்ளூர் அதிக விளைச்சல் தரும் விதைகள் இரசாயன உரங்களையே அதிகம் நம்பியிருந்தது. 1950-51ஆம் ஆண்டில், உர மானியத் திட்டத்தின் கீழ் நெல்லுக்கு 791 தொன் மட்டுமே வழங்கப்பட்டது. இது 1956-57ஆம் ஆண்டில் 14,139 தொன்களாகவும், 1966-67ஆம் ஆண்டில் 52,885 தொன்களாகவும் உயர்ந்தது. ஆனால் உரம் ஒரு நிரப்பு உள்ளீடு. அதன் செயல்திறன் பொருத்தமான விதை வகைகள் மற்றும் சரியான மேலாண்மை நடைமுறைகளின் கலவையைப் பொறுத்தது. இது எப்போதும் நடக்கவில்லை, இதன் விளைவாகக் கணிசமான கழிவுகள் மற்றும் விளைச்சலில் சீரற்ற தன்மை ஏற்பட்டது.

உதாரணமாக, 1964-67 காலப்பகுதியில், நெல் விளைச்சலில் முதல் பத்து இடங்களில் இருந்த பொலன்னறுவை, அனுராதபுரம், மொனராகலை, அம்பாந்தோட்டை மற்றும் பதுளை மாவட்டங்கள், ஏக்கருக்கு 70 பவுண்டுகளுக்கும் குறைவான உரத்தைப் பயன்படுத்தின. இதற்கு நேர்மாறாக, குருநாகல் மாவட்டம் ஒரு ஏக்கருக்கு அதிக உர நுகர்வைக் கொண்டிருந்தது (142 பவுண்டுகள்), ஆனால், விளைச்சல் அடிப்படையில் பதினான்காவது இடத்தில் இருந்தது. 1969ம் ஆண்டு மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை ( Survey on Cost of Production of Paddy ) பின்வருமாறு கூறுகிறது:

“உற்பத்தி மற்றும் விளைச்சல் ஆகியன தொடர்பிலான உரப் பயன்பாட்டின் ஒப்பீடு, விளைச்சலுக்கும் உரப் பயன்பாட்டிற்கும் இடையிலான உறவு மிக அதிகமாக இல்லை என்பதைக் காட்டுகிறது, ஏனெனில் மற்ற காரணிகள் விளைச்சலில் குறிப்பிடத்தக்கத் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கலாம்.”நிச்சயமாக, இரசாயன உரங்கள் விவசாயிகள் பயன்படுத்தும் ஒரே ஊட்டச்சத்து அல்ல. குறிப்பாக வடக்கு மாவட்டங்களில், பூர்வீக விவசாய முறைகளில் கரிம உரங்கள் ஒரு முக்கிய இடத்தைப் பிடித்துள்ளன. ஆனால் அரசாங்கத்தின் உற்பத்தி உத்தியால் இயற்கை உரத்தின் பங்கு முற்றிலும் புறக்கணிக்கப்பட்டது. எனவே, இரசாயன உரங்களை முழுமையாக நம்பியிருப்பது, இயற்கை உரத்தை முழுமையாகப் புறக்கணிப்பது, நடைமுறையில் இருந்த விவசாய நடைமுறைகளுக்கு இணங்கவில்லை. கரிம உரத்தின் பயன்பாட்டை ஊக்குவிப்பதும், பிற காரணிகள் விளைச்சலைக் கணிசமாக அதிகரிப்பதைத் தடுக்கும் மண்ணில் மட்டுமே கனிம உரங்களைப் பயன்படுத்துவதை வலியுறுத்துவதும் மிகவும் யதார்த்தமான உத்தியாக இருந்திருக்கும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக இந்தப் புரிதல் இருக்கவில்லை. அதேவேளை, உரங்கள் களைகளைக் கொண்டுவருகின்றன, களைகளுக்குக் களைக்கொல்லி தேவை, களைக்கொல்லி பயன்பாட்டிற்குப் பொருத்தமான வானிலை தேவைப்படுகிறது. இவ்வாறு செலவுகள் படிப்படியாக அதிகரித்தன.

விவசாய திட்டங்கள் டிராக்டர்களை சமமாக அதிகமாக நம்பியிருக்க வேண்டியிருந்தது. எருமைகளின் எண்ணிக்கை போதுமானதாக இல்லை என்பதை முன்னர் பார்த்தோம். ஆனால், டிராக்டர்கள், உண்மையில், விலங்குகளின் இழுவை சக்தியை நிரப்புவதற்கு அல்ல, மாற்றாக வந்தன. இதன் விளைவாக, விவசாயிகள் டிராக்டர்களை பெரிதும் நம்பியிருக்கத் தொடங்கினர் மற்றும் அவர்களின் பெரும்பாலான எருமைகளை நுகர்வுக்காக விடுவித்தனர். இது “இரண்டாம் தலைமுறை” சிக்கல்களின் தொடரை உருவாக்கியது, குறிப்பாக அந்நிய செலாவணி சிரமங்கள் டிராக்டர்கள் மற்றும் உதிரிப்பாகங்களின் இறக்குமதியைக் குறைத்தபோது ஒருபுறம், பல ட்ராக்டர்கள் செயலற்றுப் போயின. வயல்களில் உழுவதற்கான மாடுகள் சாதாரண விவசாயிகளிடம் இருக்கவில்லை. குறைந்தபட்சம் 200 ஏக்கர் பயிரிடுபராலேயே ஒரு டிராக்டரை வாங்க முடியும் என்பதால், பெரும்பாலானவை பெரிய நில உரிமையாளர்களால் வாங்கப்பட்டன. மற்ற அனைத்து விவசாயிகளும் டிராக்டர்களை வாடகைக்கு எடுக்க வேண்டியிருந்தது, பெரும்பாலும் மிக அதிக விலையில். இதனால் வினைத்திறனான உற்பத்தியை மேற்கொள்ள இயலவில்லை.

அம்பாறை மாவட்டத்தில் இது தொடர்பில் செய்யப்பட்ட ஆய்வு கீழ்வருமாறு சொன்னது:

“91% மக்கள் டிராக்டர்களை வாடகைக்கு எடுத்தனர். இந்த டிராக்டர்களில் பெரும்பாலானவை உஹான மற்றும் கோனகொல்லாவைச் சேர்ந்த முதலாளிகளுக்குச் சொந்தமானவை.”

நெவில் ஜெயவீர டிராக்டர்மயமாக்கலின் விளைவுகளைச் சிறு நில நெல் உற்பத்தியின் வரைபடமாக விவரிக்கிறார்:

“டிராக்டர்களுக்கு அதிகரித்து வரும் முக்கியத்துவம் விவசாயி தனது எருமையையும் நிலத்தைக் கிட்டத்தட்ட முழு நுகர்வுக்காக விடுவிக்க வழிவகுத்தது. இருப்பினும், அரசாங்கம் அதன் சொந்த நியாயமான விலையில் டிராக்டர்களை வாடகைக் வழங்கக்கூடிய நடைமுறைகளைப் பராமரிக்கத் தவறிவிட்டது. மேலும் டிராக்டர்களின் பயன்பாட்டைக் கட்டுப்படுத்துவதும், வசதி படைத்த கிராம விவசாயிகளின் கைகளுக்குச் சென்றது. அந்நியச் செலாவணி சிக்கல்கள் புதிய இயந்திரங்கள் மற்றும் உதிரிப் பாகங்களை இறக்குமதி செய்வதில் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்தபோது, வசதி படைத்தவர்கள் வாழ்வாதார விவசாயி மீது ஆதிக்கம் செலுத்துவதும் வலுப்படுத்தப்பட்டது. இயந்திரங்களின் உரிமையாளர்கள் தங்கள் கட்டணங்களை (வாடகைகளை) கிட்டத்தட்ட 100% அதிகரித்தனர். வாழ்வாதார விவசாயி இப்போது எருமைகளைப் பயன்படுத்தத் திரும்ப முடியாது. டிராக்டர் வைத்திருக்கும் வசதி படைத்த விவசாயியின் பிடியில் அவர் சிக்கியுள்ளார். எப்போதும் வசதி படைத்த விவசாயியாக இருக்கும் டிராக்டர் உரிமையாளரில், வாழ்வாதார விவசாயி நில உரிமையாளரை விட மிகவும் கடினமான ஒரு புதிய அடக்குமுறையாளரைப் பெற்றுள்ளார். டிராக்டர் உரிமையாளர்களைச் சுற்றி தொழில்நுட்பத்தின் ஒரு புதிய நிலப்பிரபுத்துவம் வளர்ந்துள்ளது. நெற்காணிச் சட்டம் இருந்தபோதிலும், சிறு விவசாயிகள் நெல் நிலங்களின் செயல்பாட்டுக் கட்டுப்பாட்டை டிராக்டர் உரிமையாளர்களிடம் மெதுவாக இழந்து வருகின்றனர்.”

டிராக்டர் பயன்பாடு விலங்குகளின் சக்தியை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டு, எருமைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க எருமை இனப்பெருக்கத் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருந்தால், நாட்டின் சிறு பண்ணையாளர் அமைப்பின் இந்த பேரழிவுகரமான மாற்றத்தைத் தவிர்த்திருக்கலாம். நாட்டின் சிறு பண்ணையாளர் விவசாய முறைக்கு எருமைகள் ஒருங்கிணைந்தவை. இந்த விலங்குகள் தொலைதூர மற்றும் அணுக முடியாத பகுதிகளில், குறிப்பாக மலைப்பகுதிகளிலும், கலப்பு பண்ணை திட்டங்களிலும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். மேலும், டிராக்டர்கள் மதிப்பு குறையும் அதே வேளையில், எருமைகளை இனப்பெருக்கம் செய்யலாம். அவை உரத்தையும் வழங்குகின்றன. டிராக்டர்கள் இறக்குமதி செய்யப்பட்ட பெற்ரோலில் இயக்கப்பட வேண்டியிருக்கும் அதே வேளையில், எருமைகளுக்கான புல் இலவசமாகக் கிடைக்கிறது. அந்தக் காலத்தின் அதிகாரப்பூர்வ பிரச்சாரம் மக்களை டிராக்டர்கள் மீது காதல்கொள்ள வைக்கும் பைத்தியக்காரத்தனமாக மாற்றியது. மேலும், இரு சக்கர டிராக்டர் வைத்திருப்பது ஒரு சமூகப் பொறுப்பாக மாறியது. இடுப்புத் துணியை அணிந்து, மண்வெட்டியை எடுத்துச் செல்ல விரும்பாத படித்த இளைஞர்களை கிராமப்புறங்களுக்குள் ஈர்க்க இரு சக்கர டிராக்டரைப் பயன்படுத்த வேண்டும் என்று அதிகாரிகள் வாதிட்டனர்.

டிராக்டர் உழவு என்பது விலங்குகளை உழுவதை விட உயர்ந்ததல்ல. எருமைகளின் எளிதான கிடைக்கும் தன்மை மற்றும் சேற்று மற்றும் சிறிய வயல்களில் வேலை செய்யும் திறன் ஆகியவை மக்கள் எருமைகளை விரும்பியமைக்கான பிற காரணங்களாகும். ஏற்கெனவே குறிப்பிடப்பட்ட மத்திய வங்கி கணக்கெடுப்பின்படி, நெல் உற்பத்தியில் டிராக்டர் சேவைக்கான செலவு மொத்தத்தில் 13% ஆகும். மேலும், டிராக்டர்களைப் பயன்படுத்துவது உண்மையில் குடும்ப பண்ணை வருவாயைக் குறைக்க வழிவகுக்கும். இதை ஆய்வுகள் உறுதிசெய்துள்ளன.

# Fems இன் "நாம் பேசுவோம்"

*Fems* இன் "நாம் பேசுவோம்" தொனிப்பொருளில் மாதவிடாய் சுகாதாரம் மற்றும் தூய்மை பற்றிய விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம் நாடு முழுவதிலும் பல்வேறு செயற்பாடுகளுடன் அண்மையில் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. புத்தளம் மற்றும் குருநாகல் மாவட்டங்களின் 14 பாடசாலைகளைச் சேர்ந்த 3500க்கு அதிகமான மாணவர்களுக்கு அறிவூட்டும் அமர்வுகளை இந்தத் திட்டம் முன்னெடுத்துள்ளது. நாடு முழுவதையும் சேர்ந்த 180,000க்கு அதிகமான மாணவர்களுக்கு அறிவூட்டுவதை இலக்காகக் கொண்டுள்ள இந்தத் திட்டத்தினூடாக, மாதவிடாய் சுகாதார விழிப்புணர்வு தொடர்பில் நிலவும் பிரதான சவால்களை நேரடியாக தீர்க்கும் வகையில் அமைந்துள்ளது.

இந்த முக்கியத்துவம் வாய்ந்த அமர்வுகளிலிருந்து ஆரம்பத்தில் பயன்பெற்ற பாடசாலைகளில், ஆனமடுவ, கன்னங்கர மகா வித்தியாலயம், குருநாகல், ஹிஸ்புல்லாஹ் மத்திய கல்லூரி, புனித ஏன்ஜெல்ஸ் பெண்கள் கல்லூரி, குளியாப்பிட்டி, கன்னங்கர மகா வித்தியாலயம், ஆனமடுவ மற்றும் புத்தளம் ஆனந்த கல்லூரி போன்றன அடங்கியுள்ளன.



*Fems* இனால் முன்னெடுக்கப்பட்ட இந்தத் திட்டத்துடன், இலங்கை செஞ்சிலுவை சங்கம், ஒன்றிணைந்த சமூகங்கள் மற்றும் கல்வி அமைச்சு மற்றும் சுகாதார அமைச்சு போன்றன கைகோர்த்து ஆதரவளித்திருந்தன. "நாம் பேசுவோம்" திட்டம், மாதவிடாய் சுகாதாரம் தொடர்பில் பரந்த, வயதுக்கு பொருத்தமான தகவல்களை வழங்கும் வகையில் அமைந்துள்ளதுடன், இளம் பெண்களுக்கு வலுவூட்டி, பாடசாலைகளுக்கு சமூகமளிக்காமல் இருக்கும் காலத்தை குறைப்பது மற்றும் நாடு முழுவதிலும் மாதவிடாய் தொடர்பில் அதிகம் திறந்த மற்றும் ஆதரவான சூழலை ஏற்படுத்துவது போன்றன இலக்குகளாக அமைந்துள்ளன.

# தெற்காசியாவில் Cambridge சுமார் 1,000 பாடசாலைகளை சென்றடைவு

*Cambridge University Press & Assessment (Cambridge)*, தெற்காசிய பிராந்தியத்தில் சுமார் 1,000 Cambridge சர்வதேச பாடசாலைகளை கடந்துள்ளதாக அறிவித்துள்ளது. அதனூடாக பிராந்தியத்தில் உலகத் தரம் வாய்ந்த கல்வியைப் பெற்றுக் கொடுப்பதற்கான அர்ப்பணிப்பில் முக்கியத்துவம் வாய்ந்த மைல்கல்லை எய்தியுள்ளது. தெற்காசியாவில் கல்விச் செயற்பாடுகளில் Cambridge இன் அதிகரித்துச் செல்லும் செல்வாக்குச் செலுத்தலை உறுதி செய்வதாக இந்த சாதனை அமைந்திருப்பதுடன், கல்லூரிகளின் பிரதான மையமாக இலங்கை வளர்ந்துள்ளது.

இலங்கையில் பெற்றோர்கள் மற்றும் மாணவர்களின் வளர்ந்து வரும் அபிலாஷைகளை ஆதரிக்க, Cambridge உள்ளூர் திறமைசாலிகளில் முதலீடு செய்து, அர்ப்பணிப்பான அணியை நிறுவியுள்ளது. இந்த குழுவினருக்கு, கல்லூரிகளுடன் நேரடியாக ஈடுபடவும், உள்ளூர் கல்வியாளர்களுக்கு உலகத்தரம் வாய்ந்த கற்பித்தல் மற்றும் கற்றல் அனுபவங்களை வழங்க அதிகாரம் அளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட ஆதரவை வழங்கவும் முடிந்துள்ளது.

தெற்காசியாவில் Cambridge இன் வளர்ச்சி, சர்வதேச கல்வியை நோக்கிய உலகளாவிய மாற்றத்தை பிரதிபலிக்கிறது. முந்தைய எந்த ஆண்டையும் விட 2024ஆம் ஆண்டில் Cambridge பரீட்சைகளுக்கு தோற்றியிருந்தவர்களின் எண்ணிக்கையில் சாதனை படைத்துள்ளது. பிராந்தியத்தில் உள்ள கல்லூரிகள் சமூகத்தின் கோரிக்கைகளுக்கு பதிலளிக்கும் விதமாக, Cambridge மார்ச் 2026 இல் மூன்றாவது Cambridge Checkpoint பரீட்சைத் தொடரை அறிமுகப்படுத்தும், இது கல்லூரிகளுக்கு, தமது கல்வி நாட்காட்டிகளுக்கு ஏற்ப மதிப்பீடுகளை திட்டமிட அதிக நெகிழ்வுத்தன்மையை வழங்கும்.



Cambridge இல், மாணவர்கள் AS & A நிலைக்கு 50க்கும் மேற்பட்ட வெவ்வேறு பாடங்களிலிருந்தும், Cambridge IGCSEக்கு 70க்கும் மேற்பட்ட பாடங்களிலிருந்தும் தெரிவுகளை மேற்கொள்ளலாம். இது இலங்கையின் கல்வி முறையின் மாறிவரும் தேவைகளுக்கு ஏற்ப, தங்களுக்கு மிகவும் பொருத்தமானதைத் தெரிவுசெய்ய மாணவர்களுக்கு மிகப்பெரிய நெகிழ்வுத்தன்மையை வழங்குகிறது.

3 வயது முதல் 19 வயது வரையான, Cambridge Pathway என்பது பகுப்பாய்வு சிந்தனை மற்றும் சுயாதீன ஆராய்ச்சி திறன்களை மேம்படுத்தவும், தகவல் தொடர்பு மற்றும் தலைமைத்துவ திறன்களை வளர்க்கவும் உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. Cambridge அதன் பாடத்திட்டங்களில் காலநிலை மாற்றக் கல்வியையும், கற்றலில் AI இன் நெறிமுறை பயன்பாட்டையும் இணைத்துள்ளது.

ஆழமான பாட அறிவுடன் சேர்ந்த, இந்த திறன்கள் மாணவர்களுக்கு உண்மையான உலகில் சிறப்பாக செயலாற்ற உதவியாக அமைந்துள்ளன.

தெற்காசியாவின் சர்வதேச கல்விக்கான சிரேஷ்ட உப தலைவர் வினய் ஷர்மா கருத்துத் தெரிவிக்கையில், "தெற்காசியாவில் 1,000 பள்ளிகள் என்ற இலக்கைத் தாண்டியிருப்பது, கற்பவர்களுக்கும் கல்வியாளர்களுக்கும் அதிகாரம் அளிக்கும் உலகத்தரம் வாய்ந்த கல்வியை வழங்குவதற்கான எங்கள் அசைக்க முடியாத அர்ப்பணிப்புக்கு ஒரு சான்றாகும். இலங்கையில், உலகளாவிய பாடத்திட்டங்களுக்கான அதிகரித்து வரும் தேவையைப் பூர்த்தி செய்வதற்கும், எதிர்காலத்திற்குத் தயாராக இருக்கும் அடுத்த தலைமுறை கற்பவர்களை வடிவமைக்க உதவுவதற்கும் கல்லூரிகளுடன் கூட்டு சேர்வதில் நாங்கள் பெருமை கொள்கிறோம். எங்கள் திட்டங்கள் கல்வி சாதனைகளுக்கு அப்பாற்பட்டவை - அவை காலநிலை மாற்றம் முதல் AI இன் எழுச்சி வரை உலகளாவிய சவால்களை எதிர்கொள்ளும் திறன்கள், மனநிலை மற்றும் நம்பிக்கையுடன் கற்பவர்களை ஒன்றிணைப்பதாக அமைந்துள்ளன." என்றார்.

இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான தலைமை அதிகாரி சஹாரா அன்சாரி கருத்துத் தெரிவிக்கையில், "இலங்கை விறுவிறுப்பான மற்றும் வேகமாக வளர்ந்து வரும் கல்வி சமூகத்தின் தாயகமாகும். மேலும் கற்பவர்களின் விருப்பங்களை ஆதரிக்க நாடு முழுவதும் உள்ள கல்லூரிகளுடன் நெருக்கமாக ஒத்துழைப்பதில் நாங்கள் பெருமை கொள்கிறோம். களத்தில் ஒரு அர்ப்பணிப்புள்ள குழுவுடன், இலங்கையில் உள்ள Cambridge கற்பவர்கள் உயர்தர, எதிர்காலத்திற்குத் தயாராக உள்ள கல்வியிலிருந்து பயனடைவதை உறுதிசெய்யும் தனிப்பயனாக்கப்பட்ட வழிகாட்டுதல் மற்றும் சேவைகளை எம்மால் வழங்க முடிகிறது. இது உள்ளூர் முன்னுரிமைகள் மற்றும் உலகளாவிய தரநிலைகளுடன் பொருந்தும் வகையில் அமைந்துள்ளது" என்றார்.




மனித நாகரீகத்தின் மூல வேர்களை
யாசகம் செய்ய வைத்த
உங்களுக்கு இப்போது
மகிழ்ச்சி தானே..!

ஒட்டிய கன்னம்
ஒளியிழந்த கண்கள்
பசியால் பாத்திர தட்டுகளை
ஏந்தி நிற்பவனை கண்டு
உங்களுக்கு
மகிழ்ச்சி தானே..!

அழகிய பெண்களும்
உருக்குழையாத
கற்பொழுக்க மாதர் தம்மின்
அவர்தம் ஆடவர் முன்னே
அவமானப்படுத்திய இரவுகள்
உங்களுக்கு மகிழ்ச்சி தானே..!

சோற்றுப் பருக்கைக்காக
உங்கள் முன் கையேந்தி
நீங்கள் திருடிய அறுவடைகளை
மறைக்க
அவர் மீது
அவிழ்த்து விடப்பட்ட -யுத்த
வேட்டை நாய்களின்
உமிழ்நீர் சுரக்கும் வரை
உங்களுக்கு - சுகம் தானே..!

அமைதியாக அலாவுதீனின்
அற்புத விளக்கை
ரசித்தும் புசித்தும் வாழ்ந்த
உயர் மானுட சாரங்களின்
சொந்தங்களை புதைகுழி
மேடாய் நிறைத்த-உங்கள்
கல்லறைப் பூக்கள்
கண்ணீர் சிந்தாது
இருப்பதாக இறைவன் பெயரால் துவா
கேட்கிறோம்
உங்கள் குழந்தையின் இதயத்திற்காய்..!

அழகிய மாதர் தம்மின்
வரண்ட முலைக்காம்பு
வற்றிய பால் வாசம் அறியா
மதலைகளை
கொன்று குவித்து பால்வார்க்கா
வதை முகாம் கொண்டு
சமாதானத்தின் பெயரால்
யுத்த நாமமிட்டு
உலக நர மாமிச சாத்தான்களே!
இப்போது உங்களுக்கு மகிழ்ச்சி தானே!

உங்கள் அதிகாரம்,
ஆணவம், சுரண்டல், யுத்த பீடிகை
திமிர் கௌரவம்
அத்தனையும் மானுடத்தின்
பெயரால் கூறுகிறேன்..!
சரித்திரம் மாற்றி எழுதும்
புதிய சகாப்தம் மலர்க்கும்
அது மானிடர்கான சாரமாக முகிழ்த்தெழும்

உங்கள் முற்றத்திலும் -
மனித சுவாசம் பிரவாகிக்கும்
உங்கள் குழந்தைகளுக்காய்
எங்கள் குழந்தைகள்
அன்று நினைவலைகளை மீட்டி
உங்கள் பக்கம் பூக்களையே!
சொறிவார்கள்
அதுவே - எங்கள் பேரன்புக்கான
மானுட வேருக்கான
உயர் நாகரிகத்திற்கான
விளைச்சலாக சான்று பெறும்..!

அன்று உங்கள் குழந்தைகளின் கேள்விக்கு
விடை தெரியாது
மனித குல பேரவலத்தின் எச்சங்களாக
உங்கள் குழந்தைகள் தரிசிக்க
கடவாய்
பெருமைக்கு
உரியவர்களே
அப்போதும் உங்களுக்கு மகிழ்ச்சி தானே..!

# உம்மை நோக்கிய விரல்கள்

உங்கள் விரல்கள் உம்மை
நோக்கி நீட்டப்பட்டு கொண்டிருக்கிறது
சத்தியத்தின்
வாசல் கதவுகள் உம்மை
நோக்கி அடைபடட்டும்..!

வரலாற்றின் குரல்கள்
உம்மை - நோக்கி ஊளையிடட்டும்
வசந்தத்தின் வாசம் உம்மை
வாசல் வரை வெளியே துரத்தட்டும்..!


உம்மை - நோக்கி சொர்க்கத்தின்
கதவுகள் உறுதியாக மூடட்டும்
கனவுகளை சுமந்து வாழ்விழந்த
ஒவ்வொரு உயிரியும்
உம்மை நோக்கி சபிக்கட்டும்..!

மகிழ்ச்சியின் மேட்டில்
கூடுகட்டி வாழ்ந்த
றவைகளின் கூட்டை கலைத்த
உம்மை பரலோகத்தின் பிதா பார்வை
இழக்க செய்யட்டும்..!

பசியை ஆயுதமாக
உயிர் பறித்து
பாவ செயலுக்கு ஆளான உன்னை
பாராள நீ யார்? என
உன் தலைமுறை
கேள்விக்கணையால்
துளையிடட்டும்..!

உங்கள் விரல்கள்
உம்மை- நோக்கி
நீட்டட்டும்
அன்று
உன் கூட்டணியின் சேனை
உருதெரியாது
நித்திய உறக்கத்திற்கு
உருவேரட்டும்..!

- சோலை சுப்ரா









## முதலாவது கும்பல் பெரஹெரா...

வரலாற்றுச் சிறப்புமிக்க கண்டி எசல பெரஹெராவின் முதலாவது கும்பல் பெரஹெரா புதன்கிழமை (30) மாலை 7.05 மணிக்கு சுப வேளையில் ஆரம்பமானது.

முதல் கும்பல் பெரஹெராவில் கலசத்தை ஏந்திச் செல்லும் புனித சந்தர்ப்பம், ஸ்ரீ தலதா மாளிகையின் சடங்கு யானையாகக் கருதப்படும் இண்டிஜாடாவுக்கு வழங்கப்பட்டிருந்தது.







# ரூ2,000 கோரி துண்டுப்பிரசுரம்

■ மலையக நிருபர்கள்

தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த ஊதியத்தை 2000 ரூபாவாக உயர்த்துதல் உள்ளிட்ட பல கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்ட துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சி வியாழக்கிழமை (31) அன்று ஹட்டன் பேருந்து நிலையத்தில் நடைபெற்றது.

தோட்டத் தொழிலாளர் மையம், சமூக நீதிக்கான மலையக மக்கள் இயக்கம் மற்றும் மக்கள் போராட்ட இயக்கம் ஆகியவற்றின் உறுப்பினர்களால் இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த ஊதியத்தை 2000 ரூபாவாக அதிகரித்தல், தோட்டத் தொழிலாளர்களுக்கு மாத சம்பளம் வழங்குதல், லயன் அறைகளுக்குப் பதிலாக நிலம் வழங்குதல், தோட்ட அடிமைத்தனத்தை முடிவுக்குக் கொண்டு வருதல் மற்றும் குடியுரிமை வழங்குதல், சிவில் விவகாரங்களுக்கு இடையூறாக இருக்கும் தோட்ட அதிகாரிகளின் அதிகாரத்தை ஒழித்தல், பகல் நேர பராமரிப்பு மைய வசதிகளை விரிவுபடுத்துதல், கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாட்டிற்குத் தீர்வுகளை வழங்குதல், உயர்தர அறிவியல், கணிதம் மற்றும் தொழில்நுட்ப பாடங்களுக்கான தமிழ் மொழி கல்வி முறையை விரிவுபடுத்துதல், மலையக மக்களைத் தேசிய சமூகத்தின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்வது போன்ற பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு இந்த துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

# குடும்ப பெண்ணை காணவில்லை



யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் பகுதியில் செவ்வாய்க்கிழமை(29) முதல் 25 வயதுடைய டினுசன் நிஸ்ரலா எனும் குடும்ப பெண் காணாமல் போயுள்ளதாகவும் அவரை கண்டு பிடிக்க உதவுமாறும் பெண்ணின் கணவர் மற்றும் உறவினர்கள் உதவி கோரியுள்ளனர்

கடந்த 29ஆம் திகதி இரவு 11 மணியளவில் தூக்கத்தில் இருந்து கணவன் எழுந்து பார்த்த போது குறித்த பெண் வீட்டில் இல்லாத நிலையில் அவரின் தாயிடம் மனைவி வந்துள்ளாரா என கேட்டுள்ளார் அங்கும் அவர் போக வில்லை என்பதுடன் பதற்றம் அடைந்த கணவன் மற்றும் உறவினர்கள் குறித்த பெண்ணை தேடியுள்ளனர்


இதனைத் தொடர்ந்து, காணாமல்போன பெண் சம்பந்தமாக மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளதுடன் பொலிஸாரும் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்

குறித்த பெண் காணாமல் போய் மூன்று நாட்கள் கடந்த நிலையில் பெண்ணின் கணவர் மற்றும் குடும்பம் பொது மக்களின் உதவியைக் கேட்டுள்ளனர். அவர் தொடர்பாகத் தகவல் அறிந்தால் அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திற்குத் தெரிவிக்குமாறு கோருகின்றனர்.

# இலக்கியக்களத்தில் காட்சிவழி உரை

இலக்கியக்களத்தில் காட்சிவழி உரை, கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் விநோதன் மண்டபத்தில் வெள்ளிக்கிழமை (08) மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது. “காலனியம் : கதைகள் - தேசம் 19ஆம் நூற்றாண்டை வாசித்தல்” எனும் தலைப்பில் பேரா ந.கோவிந்தராஜன் உரையாற்றவுள்ளார்.

# திண்மக்கழிவு நிலையத்தில் தீ



■ எம்.எஸ்.எம்.ஹனீபா

அம்பாறை, ஒலுவில் அஸ்ரப் நகர் பிரதேசத்தில் அமைந்துள்ள திண்மக்கழிவு சேகரிக்கும் நிலையத்தில் கொட்டப்பட்டுள்ள குப்பை மேட்டில் வியாழக்கிழமை (31) நள்ளிரவில் திடீர் தீப் பரவல் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து, அக்கரைப்பற்று மாநகர சபைகளின் தீ அணைப்புப் பிரிவினரால் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாக அட்டாளைச்சேனை பிரதேச சபையின் தவிசாளர் ஏ.எஸ்.எம். உவைஸ் தெரிவித்துள்ளார்.

பிரதித் தவிசாளர் பாறுக் நஜித் மற்றும் திண்மக்கழிவு முகாமைத்துவ பொறுப்பாளர் எம். இர்பான் உட்பட ஊழியர்களும் உடனடியாக செயல்பட்டு தீயைக் கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வந்துள்ளனர்.

அட்டாளைச்சேனை பிரதேச சபையின் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் இத் திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவ நிலையத்தில் அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, நிந்தவூர், காரைதீவு, சம்மாந்துறை ஆகிய பிரதேச சபைகளினால் நாளாந்தம் தத்தமது பிரிவுகளில் சேகரிக்கப்படும் குப்பைகள் கொட்டப்படுகின்றன.

# பாவனைக்கு உதவாத மீன்கள் அழிக்கப்பட்டன

■ ஏ.எச்.ஹஸ்பர்

திருகோணமலை மாவட்ட கிண்ணியா நகர சபை பகுதிக்குட்பட்ட கிண்ணியா ஏ-15 பிரதான வீதியில் நடைபெறுகின்ற மீன் சந்தையில் சுகாதாரத்துக்கு கேடான மீன்கள் விற்பனை செய்யப்படுகின்றதாகக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கமைய கிண்ணியா நகர சபை தவிசாளர் எம்.எம். மஹ்தி தலைமையில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரிகள் வியாழக்கிழமை (31) அன்று திடீர் சுற்றிவளைப்பு மேற்கொண்டுள்ளனர்.

இதன் போது பாவனைக்கு உதவாத ஒரு தொகை மீன்கள் கைப்பற்றப்பட்டு தவிசாளர் முன்னிலையில் அழிக்கப்பட்டுள்ளது.

இனி வரும் காலங்களில் இவ்வாறான பாவனைக்கு உதவாத மீன்களை விற்பனை செய்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மீன் வியாபாரிகளுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



# சார்ஜன்டை மன்னித்த தேரர்

■ ரீ.எல் ஜவ்பர்கான்

பௌத்த மத தலைவர் ஒருவர் பொலிஸ் சார்ஜன் ஒருவருக்கு மன்னிப்பு வழங்கிய சம்பவம் வியாழக்கிழமை (31) அன்று காத்தான்குடியில் பதிவாகியுள்ளது.

பலாங்கொட ஸ்ரீ சுதர்ம ராம விகாரையின் விஹாராதிபதியும்,மனிதநேய செயற்பாட்டாளருமான பொகவந்தலாவ ராகுல தேரரே இவ்வாறு காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் வைத்து குறித்த பொலிஸ் சார்ஜட் ஒருவருக்கு மன்னிப்பு வழங்கியுள்ளார்.

காத்தான்குடி கடற்கரை வீதியில் உள்ள உணவு விடுதியொன்றில் குறித்த பௌத்த மத தலைவர் உரையாடிக் கொண்டிருந்த போது மேற்படி பொலிஸ் சார்ஜன் குறித்த பௌத்த மத தலைவரின் மீது அவதூறான வார்த்தைகளைப் பேசி அவரை சிரமத்திற்கு உட்படுத்தியுள்ளார்.

இதன்போது, குறித்த பொலிஸ் சார்ஜன் கிழக்கு மாகாண சிரேஷ்ட பொலிஸ் மா அதிபர் மற்றும் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோருடன் தொடர்பு கொண்டு தன்னை குறித்த பொலிஸ் சார்ஜன் இவ்வாறு சிரமத்திற்கு உட்படுத்தியதாக முறையிட்டதைத்தொடர்ந்து

இது தொடர்பாக காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதுடன், குறித்த சார்ஜன்ட் காத்தான்குடி பொலிஸ் நிலையத்திற்கு அழைக்கப்பட்டு விசாரணை நடத்தப்பட்டது.



பின்னர் குறித்த பொலிஸ் சார்ஜன்ட் பொகவந்தலாவ ராகுல தேரரிடம் மன்னிப்பு கேட்டதை அடுத்துக் குறித்த சர்ச்சை முடிவுக்கு வந்துள்ளது. இதன் மூலம் குறித்த பொலிஸ் சார்ஜன் மீது எடுக்கப்படவிருந்த சட்ட நடவடிக்கை இல்லாமல் செய்யப்பட்டதுடன் பிரச்சினை சுமுகமாகவும் தீர்த்து வைக்கப்பட்டது.

இவ்விடயத்தில் அதிக அக்கறை செலுத்திய காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆர்.எம்.ஐ.ரத்னாயகவிற்கு பொகவந்தலாவ ராகுல தேரர் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்தார் .

பொகவந்தலாவ ராகுல தேரருடன் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமாவின் செயலாளர் மௌலவி தாசிம் உட்பட சமூக அமைப்புகளின் பிரதிநிதிகளும் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தேயிலை தூள் திருடிய உதவி முகாமையாளருக்கு பிணை

■ செ.தி.பெருமாள்

சுமார் 1,200 கிலோ கிராம் அடங்கிய 20 பொதிகள் அடங்கிய No. 1 டஸ்ட், 60 கிலோ கிராம் தேயிலை தூளைத் திருடிய குற்றச்சாட்டை ஒத்துக்கொண்ட தோட்ட உதவி முகாமையாளர் ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தில், புதன்கிழமை (30) பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

ஆர்.பி.கே.பிளான்டேசனுக்கு உரித்தான மஸ்கெலியா பிரவுன்ஸ்வீக் தோட்ட தேயிலை தொழிற்சாலையில் இருந்து 840,000 ரூபாய் பெறுமதியான No. 1 டஸ்ட், தேயிலை தூள் 60 கிலோ கிராம் நிறை கொண்ட 1,200 கிலோ கிராம் அடங்கிய 20 பொதிகள் கடந்த 23ஆம் திகதி களவாடப்பட்டுள்ளது என தோட்ட முகாமையாளர் நிலுஷான் மதுசங்க ஜயவீர , மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் புகார் ஒன்றைப் பதிவு செய்திருந்தார்.

அதனைத் தொடர்ந்து மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமாரவின் பணிப்புக்கு அமைய விசாரணைகள் ஆரம்பிக்க பட்டு தேயிலை தொழிற்சாலையில் பொருத்தப்பட்டு இருந்த சீ.சீ. டி வி கெமராக்கள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. 23.07.2025. அன்று இரவு 8.30.மணி தொடக்கம் 10.30 மணிக்குள் தேயிலை தூள் அடங்கிய 20 பொதிகள் தோட்ட உதவி முகாமையாளரால் லொறிக்கு ஏற்றப்பட்டது தெரிய வந்தது.

அதனைத் தொடர்ந்து தோட்ட உதவி முகாமையாளரை மஸ்கெலியா பொலிஸார் கைது செய்து ஹட்டன் நீதிமன்றில் ஆஜர் படுத்தினர். அவர், ஜூலை 25ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். இதனையடுத்து, 500,000 ரூபாய் பெறுமதியான இரண்டு சரீரபிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.



# ‘தொதல்’

## சிறுவனின் கதை கண்களை நனைக்கும்

பாலித ஆரியவன்ச



ஒரு நீல நிற கூடையை வைத்திருந்த ஒரு சிறுவனைப் பார்த்தேன். அவன் அங்குள்ள மருந்தகத்தில், தன் பாட்டிக்கு மருந்து வாங்க வந்திருந்தான். நான் ஒரு அந்நியனைப் போல உணர்ந்தேன், “கூடைக்குள் என்ன இருக்கிறது? நீ இங்கே என்ன செய்கிறாய்?” என்று சிறுவனிடம் கேட்டேன். பின்னர், “நான் ஒரு தொழில் செய்கிறேன்" என்று சாதாரணமாகச் சொன்னான்.

பண்டாரவளையில் உள்ள அங்காடிக்கு முன்பாக, அந்த சிறுவனை புதன்கிழமை (30) மாலை சுமார் 8.30 மணியளவில் சந்தித்தேன் என, எமது நிருபர் பாலித ஆரியவன்ச கதையைத் தொடர்கிறார்.

அப்போது நான் அவனிடம் பாடசாலைக்குச் செல்கிறாயா? என்று கேட்டேன், அப்போது தரையைப் பார்த்துக் கொண்டிருந்த சிறுவன், “நான் பாடசாலைக்கு செல்கிறேன். நான் ஏழாம் வகுப்பு படிக்கிறேன். எனக்கு இப்போது 11 வயது. "நான் மதியம் 2 மணிக்குப் பிறகு தொதல் விற்கிறேன்" என்று அவன் சிறிது கவலையுடன் சொன்னான். அவன் சொன்ன விதம் அவருடைய வாழ்க்கை முறையைப் பற்றி எனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

நான் அவனிடம் அவனுடைய பெற்றோரைப் பற்றிக் கேட்டபோது, அவன் சொன்னான், “என் அப்பா வேறொரு பெண்ணை மணந்து எங்கள் குடும்பத்தை விட்டுச் சென்று விட்டார். என் அம்மா வேறு ஒருவருடன் தொடர்பு வைத்து என்னையும் என் சகோதரியையும் விட்டுச் சென்று விட்டார். இப்போது நானும் என் சகோதரியும் என் பாட்டியுடன் வசிக்கிறோம். என் பாட்டி தொதல் செய்து எங்களைக் கவனித்துக் கொள்கிறார். நான் அவளுக்கு அவற்றை விற்க உதவுகிறேன். எங்களிடம் அதிகம் இல்லாவிட்டாலும், என் பாட்டியுடன் நாங்கள் மகிழ்ச்சியாக இருக்கிறோம்.

அவரது கதை என்னை உடைத்தது. நான் உடனடியாக அவருக்கு உணவு மற்றும் பானங்கள் வழங்க முன்வந்தபோது, அவர் அதை நிராகரித்தார். அவர் சீரியஸாக ஏதோ சொன்னார். "நீ இப்போது வாங்கி தரும் முயற்சிக்கும் உணவைச் சாப்பிடுவதில் எனக்கு ஆட்சேபனை இல்லை, ஆனால், என் சகோதரி மற்றும் பாட்டியால் இந்த உணவை வாங்க முடியாது. அதனால் எனக்கு இந்த உணவு வேண்டாம்." "நான் வீட்டிற்குச் சென்று அவர்கள் சாப்பிடும் அதே உணவைச் சாப்பிடுவேன்" என்றார்.

இவ்வளவு இளம் வயதில் அவரது துணிச்சலாலும், அன்பாலும், நான் அவருக்குக் கொஞ்சம் பணம் கொடுத்தேன். நான் அவருக்குப் பணம் கொடுத்தவுடன், அவர் உடனடியாக தனது பாட்டியை தன்னிடம் இருந்த தொலைபேசியில் அழைத்து, ஒரு குறிப்பிட்ட நபர் அவருக்குப் பணம் கொடுத்ததாகவும், கொடுக்கப்பட்ட தொகையையும் கொடுத்ததாகவும் கூறினார். சிறுவனின் நடத்தையால் நான் ஆச்சரியப்பட்டேன். இந்த நேரத்தில் இது போன்ற ஒரு குழந்தையா அது?

எனது அன்பான பண்டாரவளை மக்களே, அல்லது யாராவது அங்கு செல்லும்போது, இந்தக் குழந்தையைப் பார்த்தால், தயவுசெய்து அவரிடமிருந்து கொஞ்சம் தொதல் வாங்கிக் கொள்ளுங்கள். அவர் உண்மையிலேயே திறமையான மற்றும் நல்ல குழந்தை, ஒரு சிறந்த நோக்கத்துடன் இருக்கிறார். அவ்வாறு செய்வதன் மூலம், இந்த உலகம் இன்னும் அன்பால் நிறைந்து உள்ளது என்பதை அவர் உணர்கிறார்.

இது கவனத்தை ஈர்க்கும் நோக்கத்திலோ அல்லது இந்த சிறுவனை அவமானப்படுத்தும் நோக்கத்திலோ வெளியிடப்பட்ட ஒன்றல்ல. "எங்களால் முடிந்தவரை மக்களுக்கு உதவுவோம்."

ஃபேஸ்புக்கில் பகிரப்பட்ட இந்தப் பதிவு, அதைப் பார்த்த அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

பொலிஸார், புலனாய்வு அமைப்புகள், சமூகப் பணியாளர்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் அனைத்தும் சிறுவனைக் கண்டுபிடிக்க பெரும் முயற்சியை மேற்கொண்டன.

இருப்பினும், ஊவா மாகாண நன்னடத்தை மற்றும் குழந்தைகள் பாதுகாப்பு ஆணையர், திருமதி. ஈ.கே.வி.ஜே. எதிரிசூரியா, அந்த அலுவலக அதிகாரிகளுடன் சேர்ந்து, 30ஆம் திகதி சிறுவனை முதலில் கண்டுபிடித்தனர்.

பண்டாரவளையில் திகாராவ கிராமத்தில் ஒரு சிறிய உணவகம் இருந்தது. அந்த தேநீர் கடையை சிறுவனின் பாட்டி நடத்தி வந்தார்.

மத்திய கிழக்கில் வீட்டு வேலைக்காரராக வேலை செய்து சம்பாதித்த பணத்தில் ஒரு வீட்டை பாட்டி கட்டியுள்ளார்.

அந்தப் பெண் ஆரம்பத்தில் நன்னடத்தை ஆணையர் மற்றும் பிற அதிகாரிகளைப் பார்த்ததும் பயந்து, கூச்ச சுபாவத்துடன் பேசினாள்.

“பயப்படாதே அம்மா. குடிவரவுத் துறையிலிருந்து உங்களுக்கு உதவ நாங்கள் வந்துள்ளோம். விவரங்களை சொல்லுங்கள்” என்று ஆணையர் கூறினார்.

“என் மகன் என் மருமகளையும் இரண்டு குழந்தைகளையும் இங்கே விட்டுச் சென்றாள். பின்னர் தன் மகன் தனது செலவுகளுக்குப் பணம் செலுத்துவதாகவும், இரண்டு குழந்தைகளையும் கவனித்துக் கொள்வதாகவும் கூறினார். ஆனால் அதன் பிறகு, அவள் ஒரு பெண்ணைப் பின் தொடர்ந்து இரத்தினபுரி பகுதியில் வசித்து வருகின்றாள்.

தவறான செயல்களைச் செய்தாள், அவளுடைய குழந்தைகளைப் பார்க்கக் கூட வரவில்லை” எனக்கும் நான்கு குழந்தைகள். இரண்டு மகன்களுக்கு திருமணம் ஆகிவிட்டது, ஒரு மகளுக்குத் திருமணம் ஆகிவிட்டது, இளைய மகன் மட்டுமே என்னுடன் இருக்கிறான். நானும் என் மகனும் இந்த தேநீர் கடையை நடத்துகிறோம். இது ஒரு சிறிய தொழில். நான் தொதல் தயாரிக்கிறேன், நீங்கள் கேட்டால், நான் அதை உங்களுக்காகச் செய்து தருவேன். அது ஒரு சிறிய தொகை. இந்த இருவரும் எங்கள் வீட்டில் தங்கி, என் சொந்த குழந்தைகளைப் போல அவர்களைக் கவனித்துக்கொள்கிறார்கள். இந்த பேரனுக்கு 11 வயது, அவருடைய என் சகோதரிக்கு 7 வயது.

சில நேரங்களில் இந்த குழந்தை பண்டாரவளைக்கு சில தொதல்களை எடுத்துச் சென்று விற்று எனக்கு பணம் கொண்டு வருகிறது.

நான் அந்தப் பணத்தில் ஒரு பகுதியை அவனுக்கும் அவனுடைய தங்கைக்கும் படிப்புக்குப் பணம் கொடுக்கிறேன், அதை அவள் விருப்பத்துடன் செய்கிறான்“. நாங்கள் அவனை எந்த வகையிலும் பாதிக்கவில்லை.

இந்த குழந்தை, தனது தாயைப் பார்த்ததில்லை என்று நன்னடத்தை ஆணையரிடம் கூறினார்.

நானும் என் சகோதரியும் என் பாட்டி வீட்டில் வசிக்கிறோம். நாங்கள் இருவரும் பாடசாலைக்குச் செல்கிறோம். நான் ஏழாம் வகுப்பு படிக்கிறேன். இந்த வருடம், என் சகோதரி 5ஆம் வகுப்பு படிக்கிறார்.

என் பாட்டி தயாரித்துக் கொடுக்கும் தொதல்களை விற்க முடியாத நாட்களில், நான் அவற்றை பண்டாரவளை பேருந்தில் கொண்டு சென்று விற்று பணம் கொடுப்பேன். அன்று நான் சுமார் ஏழாயிரம் ரூபாய்க்கு தொதல்களை விற்கிறேன், பின்னர் என் பாட்டி எனக்கு கொஞ்சம் பணம் தருகிறார்.

நான் பாடசாலை முடித்து மூன்று மணிக்கு வீட்டுக்கு வருகின்றேன். அதன்பின்னர் அவன் பண்டாரவளை தொதல் விற்க போகிறான், ஏழு மணியளவில் வீட்டிற்கு வந்து இரவு சுமார் 10 மணிக்கு படிக்கிறான்.

இந்த அழகான சிறுவன் இப்படிச் சொல்லிக்கொண்டே இருந்தேன்.

“இந்தக் குழந்தையை மறுபடியும் தொதல் விற்க அனுப்பாதே. உன் தொதல்களை விற்கவும், இரண்டு குழந்தைகளுக்கும் உதவவும் ஒரு திட்டத்தை வகுப்போம். உங்களுக்கு ஏதாவது உதவி தேவைப்பட்டால் எனக்கு உதவுங்கள், ”என்று ஆணையர் கூறினார், அதே நேரத்தில், தாய் கீழே பார்த்தாள். குழந்தை மகிழ்ச்சியுடன் சிரித்தது.

ஊவா மாகாண நன்னடத்தை ஆணையர் ஈ.கே. வி.ஜே.எதிரிசூரிய, இந்த இரண்டு குழந்தைகளைப் பற்றிய பின்வரும் கதையை எங்களிடம் கூறினார். இந்த இரண்டு குழந்தைகளுக்கும் அவர்களின் பாட்டியிடம் பாதுகாப்பாக உள்ளது.

எனவே, அவர் அவர்களை அருகில் இருக்க அனுமதிக்கிறார் மற்றும் ஒரு நன்னடத்தை அதிகாரியின் மேற்பார்வையின் கீழ் அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுத்து வருகிறார்.

ஆனால், மேலும் உதவ விரும்புவோர் அவ்வாறு செய்யலாம் என்று ஊவா மாகாண நன்னடத்தை மற்றும் குழந்தைகள் பாதுகாப்புத் துறை கூறுகிறது.



### மன அழுத்தத்தில் தத்தளிக்கும் மனங்கள்

# உளவளத் துணையும் சமூகப் பார்வையும்



பிரியங்கா தர்மராசா,
உளவளத்துணை மாணவி,
தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனம்.

மன அழுத்தம் என்பது இன்று உலகளவில் கண்ணுக்குப் புலப்படாத ஒரு கொடிய நோயாக எதிரொலிக்கிறது. நவீன வாழ்வின் இயந்திரத்தனமான ஓட்டத்தில், இலக்கற்ற இலக்குகளை நோக்கி ஓடிக்கொண்டிருக்கும் எண்ணற்ற மனங்கள், சொல்லொணாத் துயரத்தையும், அழுத்தத்தையும் மௌனமாகச் சுமந்து கொண்டு தத்தளிக்கின்றன. ஒரு காலத்தில் தனிநபர்களின் பலவீனமாகவோ அல்லது முதுமைப் பருவத்தின் இயல்பான விளைவாகவோ தவறாகக் கணிக்கப்பட்ட மன அழுத்தம், இன்று பாலின வேறுபாடின்றி, வயது வித்தியாசமின்றி, சமூக அந்தஸ்து பாராமல் அனைவரையும் வேட்டையாடும் ஒரு கொடிய அரக்கனாக உருவெடுத்துள்ளது. இதன் ஆழத்தையும், பரவலையும், தனிநபர் முதல் உலகளாவிய சமூகம் வரை இதன் வேரூன்றியிருக்கும் தாக்கத்தையும் நாம் கருணையுடனும், புரிதலுடனும் அணுகுவது காலத்தின் அதிமுக்கியத் தேவையாகும். “உள்ளம் உடைந்து போனால் உலகம் இருண்டதாகத் தெரியும்” என்பது நம் முன்னோர் வாக்கு. ஆம், மனித மனம் ஒரு பொக்கிஷம் போன்றது. அதைச் சரியாகப் பராமரிக்காவிட்டால், அது துருப்பிடித்துப் பயனற்றுப் போகும் அபாயம் உள்ளது.

இன்றைய அவசர உலகில், நாம் நம்முடைய உடலின் ஆரோக்கியத்திற்கு அளிக்கும் முக்கியத்துவத்தை மனதின் ஆரோக்கியத்திற்கு அளிப்பதில்லை என்பது வருந்தத்தக்கது. வேலையிடத்தில் ஏற்படும் அதிகப்படியான பணிச்சுமை, குடும்பப் பிரச்சினைகள், பொருளாதார நெருக்கடிகள், உறவுச் சிக்கல்கள், சமூகத்தில் நிலவும் போட்டி மனப்பான்மை, ஊடகங்களின் பொய்யான கவர்ச்சி என மன அழுத்தத்திற்கான காரணிகள் பல்கிப் பெருகியுள்ளன. ஒவ்வொரு தனிநபரும் தமது தனிப்பட்ட வாழ்க்கைச் சூழலிலும், அனுபவங்களிலும் வேறுபடுவதால், மன அழுத்தம் ஒவ்வொருவரையும் ஒரு தனித்துவமான முறையில் தாக்குகிறது. சிலருக்கு இது வெளிப்படையான அறிகுறிகளுடன் வெளிப்படலாம், சிலருக்கு உள்ளுக்குள்ளேயே வருத்தும் ஒரு நாள்பட்ட மன வேதனையாக உருவெடுக்கலாம். சமூக ஊடகங்களின் மாயாஜால உலகம் இந்த நெருப்பை மேலும் ஊதி விடுகிறது. மற்றவர்களின் மிகைப்படுத்தப்பட்ட, வடிகட்டப்பட்ட மகிழ்ச்சியான தருணங்களையும், பகட்டான வாழ்க்கை முறையையும் பார்த்துத் தமது யதார்த்தமான வாழ்க்கையோடு ஒப்பிட்டுப் பார்ப்பது ஒரு தொற்றுநோய் போலப் பரவி வருகிறது. “அடுத்த வீட்டு நெல்லிக்காய் இனிக்கும்” என்ற பழமொழியைப் போல, அடுத்தவர்களின் வெளித்தோற்றமான மகிழ்ச்சியைப் பார்த்துத் தமது சொந்த வாழ்க்கையின் மீது ஒரு அதிருப்தியும், ஏக்கமும் ஏற்படுகிறது. “நான் மட்டும் ஏன் இவ்வளவு பின்தங்கியிருக்கிறேன்? மற்றவர்கள் எவ்வளவு அதிர்ஷ்டசாலிகள்?” போன்ற எண்ணங்கள் மனதை அரித்து, தாழ்வு மனப்பான்மைக்கும், தன்னம்பிக்கை இழப்பிற்கும், இறுதியில் மன அழுத்தத்தின் ஆழமான பள்ளத்திற்கும் வழிவகுக்கிறது.

“உண்மையான மகிழ்ச்சி என்பது அடுத்தவர்களுடைய வாழ்க்கையின் பகட்டான வெளித்தோற்றத்தோடு நம்முடைய உள்ளார்ந்த வாழ்க்கையை ஒப்பிட்டுப் பார்ப்பதில் இல்லை, மாறாக நம்முடைய தன்னிறைவிலும், இருப்பதைக்கொண்டு மனநிறைவு அடைவதிலும்தான் உள்ளது” என்ற ஞானம்மிக்க உண்மையை நாம் உணரத் தவறுகிறோம். ஒவ்வொரு தனிமனிதனுக்கும் அவரவருடைய தனித்துவமான பயணமும், அவரவருக்கே உரித்தான சவால்களும் உண்டு என்பதை நாம் ஆழமாகப் புரிந்து கொள்ள வேண்டும். இன்றைய அதிவேக உலகில், குழந்தைகளும், இளைஞர்களும் கூட மன அழுத்தத்தின் கொடிய பிடியில் சிக்கித் தவிக்கிறார்கள் என்பது மிகவும் வேதனை அளிக்கும் ஒரு சமூக யதார்த்தமாகும். கல்வி நிலையங்களில் நிலவும் கடுமையான போட்டி, அதிகப்படியான பாடச்சுமை மற்றும் தேர்வுப் பயம், எதிர்காலம் குறித்த அதிகப்படியான அழுத்தம், சக மாணவர்களுடனான உறவுச் சிக்கல்கள், சமூக வலைத்தளங்களில் ஏற்படும் சைபர் கொடுமை மற்றும் தவறான ஒப்பீடுகள் போன்ற பல்வேறு காரணங்களால் அவர்களின் இளமைப் பருவமும் நிம்மதியற்றதாக மாறி வருகிறது. “சிறு வயதில் ஏற்படும் மன அழுத்தம், ஒரு செடியின் வேரை அரிப்பது போன்றது” அது எதிர்காலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சியையும் பாதிக்கும் என்று மனநல மருத்துவர்கள் கவலையுடன் எச்சரிக்கின்றனர். பெற்றோர்களும், ஆசிரியர்களும், சமூகமும் இவர்களின் மென்மையான மனதைப் புரிந்துகொண்டு, அவர்களுக்குப் பாதுகாப்பான, ஆதரவான மற்றும் ஆரோக்கியமான சூழலை உருவாக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

மன அழுத்தத்தின் அறிகுறிகள் ஒவ்வொரு தனிநபருக்கும் வேறுபடலாம் மற்றும் அவை உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் பல்வேறு விதமாக வெளிப்படலாம். தூக்கமின்மை அல்லது அதிகப்படியான தூக்கம், பசியின்மை அல்லது அளவுக்கு அதிகமான பசி, தொடர்ச்சியான உடல் சோர்வு, எதிலும் ஆர்வமில்லாமல் இருப்பது, காரணமின்றி எரிச்சல் மற்றும் பதட்டம், ஒரு விஷயத்தில் கவனத்தைச் செலுத்த முடியாமை, ஞாபக மறதி, எந்த நேரமும் சோகமாக அல்லது கவலையாக இருப்பது, தற்கொலை எண்ணங்கள் தோன்றுவது போன்றவை சில பொதுவான மனரீதியான அறிகுறிகளாகும். அதேபோல், தொடர்ச்சியான தலைவலி, வயிற்று வலி, நெஞ்சு வலி, காரணமில்லாத உடல் வலி, மூச்சுத் திணறல் போன்ற உடல் ரீதியான பிரச்சினைகளும் மன அழுத்தத்தின் மறைமுக வெளிப்பாடாக இருக்கலாம். சில சமயங்களில், நாள்பட்ட மன அழுத்தம் இதய நோய்கள் மற்றும் பிற உடல்நலப் பிரச்சினைகளுக்கும் வழிவகுக்கலாம். இந்த அறிகுறிகளை ஆரம்பத்திலேயே அடையாளம் கண்டு, தயங்காமல் உளவள ஆலோசனை மற்றும் முறையான மனநல சிகிச்சையை மேற்கொள்வது மிகவும் முக்கியம். “வருமுன் காப்பது சிறந்தது” என்ற முதுமொழியைப் போல, மனநலப் பிரச்சினைகளை ஆரம்பத்திலேயே கவனித்து சரிசெய்வது பின்னாளில் ஏற்படும் பெரும் பாதிப்புகளிலிருந்து நம்மைக் காக்கும்.

மன அழுத்தத்திலிருந்து விடுபடவும், அதன் தாக்கத்தை திறம்பட நிர்வகிக்கவும் பல்வேறு பயனுள்ள வழிகள் உள்ளன. “உணவே மருந்து” என்பதைப் போல, ஆரோக்கியமான மற்றும் சத்தான உணவு முறையைப் பின்பற்றுவது உடல் மற்றும் மன நலத்திற்கு மிகவும் அவசியம். போதுமான அளவு தூக்கம் (ஒரு நாளைக்கு 7-8 மணி நேரம்) மூளையின் சரியான செயல்பாட்டிற்கும், மன அமைதிக்கும் இன்றியமையாதது. “உடற்பயிற்சியே சிறந்த மருந்து” என்பதை உணர்ந்து, தினமும் தவறாமல் உடற்பயிற்சி செய்வது மன அழுத்தத்தைக் குறைக்கவும், மனநிலையை மேம்படுத்தவும் உதவும். தியானம், யோகா, மூச்சுப் பயிற்சி போன்ற மனதை அமைதிப்படுத்தும் மற்றும் ஒருநிலைப்படுத்தும் பழக்கங்கள் மன அழுத்தத்தின் தீவிரத்தைக் கணிசமாகக் குறைக்கின்றன. பிடித்தமான பொழுதுபோக்குகளில் ஈடுபடுவது, நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் தரமான நேரத்தைச் செலவிடுவது, இயற்கையோடு ஒன்றிணைவது போன்ற எளிய விஷயங்கள் கூட மனதிற்குப் புத்துணர்ச்சியையும், நிம்மதியையும் அளிக்கின்றன. மேலும் தனிமையில் வாடும் மனங்களுக்கு ஒரு தோழனின் கனிவான அரவணைப்பு, “திசை தெரியாமல் தவிக்கும் படகிற்கு ஒரு கலங்கரை விளக்குப் போன்றது” என்று உளவியல் அறிஞர்கள் கூறுகின்றனர். ஆம், மன அழுத்தத்தில் இருப்பவர்களுக்கு நாம் வழங்கும் ஒரு சிறிய ஆதரவும், அக்கறையான வார்த்தையும், அவர்களின் கஷ்டங்களைப் பொறுமையாகக் கேட்டுப் புரிந்து கொள்வதும் கூட ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும். அவர்களைத் தனிமைப்படுத்தாமல், அவர்களோடு தோளோடு தோள் நிற்பது அவர்களின் மனதை இலகுவாக்கும். உதவி தேவைப்படுபவர்களுக்கு சரியான உளவள ஆலோசனை மற்றும் மனநல சிகிச்சை கிடைப்பதை உறுதி செய்வதும், மனநல மருத்துவர்கள் மற்றும் ஆலோசகர்கள் குறித்த சமூகத்தில் நிலவும் தவறான கண்ணோட்டத்தை மாற்றுவதும் நமது அனைவரின் கூட்டுப் பொறுப்பாகும். “ஊர் கூடினால் தேர் இழுக்கலாம்” என்பதைப் போல, நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட்டால், மன அழுத்தத்தால் வாடும் மனங்களுக்கு ஒரு நம்பிக்கை ஒளியை ஏற்ற முடியும்.

உளவளத் துணை (Counseling) என்பது மன அழுத்தத்தை எதிர்கொள்ளவும், மனநலப் பிரச்சினைகளைச் சமாளிக்கவும் ஒரு முக்கியமான கருவியாகும். பயிற்சி பெற்ற உளவள ஆலோசகர்கள், மன அழுத்தத்தின் காரணங்களை அடையாளம் காணவும், ஆரோக்கியமான *coping mechanisms* எனப்படும் பிரச்சினைகளைச் சமாளிக்கும் திறன்களை வளர்க்கவும் உதவுகிறார்கள். அவர்கள் ஒரு பாதுகாப்பான மற்றும் நம்பிக்கையான சூழலை உருவாக்கி, தனிநபர்கள் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தவும், பிரச்சினைகளை புதிய கோணத்தில் பார்க்கவும் உதவுகிறார்கள். “ஆயிரம் வைத்தியரை அணுகுவதை விட, ஒரு நல்ல ஆலோசகரை அணுகுவது மனதிற்கு அமைதியைத் தரும்” என்பது அனுபவமிக்கவர்களின் வாக்கு. உளவள ஆலோசனை என்பது பலவீனத்தின் அறிகுறி அல்ல, மாறாகத் தன்னைப் பற்றி நன்கு அறிந்து கொண்டு, ஆரோக்கியமான வாழ்க்கையை வாழ எடுக்கப்படும் ஒரு தைரியமான முடிவு என்பதை நாம் உணர வேண்டும்.

மன அழுத்தம் என்பது ஒரு தனிநபரின் தனிப்பட்ட பிரச்சினை மட்டுமல்ல, அது நம்முடைய சமூகத்தின் ஒட்டுமொத்த ஆரோக்கியத்தையும், முன்னேற்றத்தையும் பாதிக்கக்கூடிய ஒரு பாரிய பிரச்சினை என்பதை நாம் ஆழமாக உணர வேண்டும். “ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு” என்பதைப் போல, ஒருவருக்கொருவர் ஆதரவாகவும், புரிதலுடனும் இருப்பது, மன அழுத்தத்தில் தத்தளிக்கும் எண்ணற்ற மனங்களுக்கு ஒரு ஒளிமயமான நம்பிக்கை ஒளியைக் கொடுக்கும். ஆரோக்கியமான உடல்நலத்தைப் போலவே ஆரோக்கியமான மனநலமும் ஒரு வலிமையான மற்றும் முன்னேற்றமான சமூகத்தின் அடிப்படை என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடக் கூடாது. இந்த விழிப்புணர்வு ஒவ்வொரு தனிமனிதனின் மனதிலும் ஆழமாக விதைக்கப்பட வேண்டும், அப்போதுதான் நாம் மன அழுத்தமில்லாத, ஆரோக்கியமான மற்றும் மகிழ்ச்சியான ஒரு சமூகத்தை உருவாக்க முடியும். “மனம் இருந்தால் மார்க்கம் உண்டு” என்பதைப் போல, நாம் அனைவரும் மனநலத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துச் செயல்பட்டால், மன அழுத்தத்தில் தவிக்கும் மனங்களுக்கு ஒரு புதிய விடியலை உருவாக்க முடியும்.



வொஷிங்டன்

### சர்வதேச மற்றும் இந்திய அரசியலில்

# பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய ட்ரம்ப்

“ஒருநாள், பாகிஸ்தானிடமிருந்து எண்ணெய் வாங்கும் நிலை இந்தியாவுக்கு வரலாம்” என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கூறியுள்ளார். இது சர்வதேச மற்றும்இந்திய அரசியலிலும் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

முன்னதாக புதன்கிழமை(30) அன்று இந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் பொருட்களுக்கு 25 சதவீதம் வரி விதிப்பை அமுல்படுத்துவதாக ட்ரம்ப் அறிவித்தார்.

இந்த வரி விதிப்பு இன்று வெள்ளிக்கிழமை (01) முதல் அமுலுக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில், “ஒருநாள், பாகிஸ்தானிடமிருந்து எண்ணெய் வாங்கும் நிலை இந்தியாவுக்கு வரும்” என்று கூறி ட்ரம்ப் அடுத்த சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கிறார்.

இது தொடர்பாக அவர் தனது சமூக வலைதளப் பக்கத்தில், “நாங்கள் இப்போதுதான் பாகிஸ்தானுடன் ஓர் ஒப்பந்தத்தை எட்டியுள்ளோம். அதன்படி, பாகிஸ்தானும், அமெரிக்காவும் இணைந்து மிகப்பெரிய எண்ணெய் இருப்பை உருவாக்கவுள்ளோம். இது தெற்காசியாவின் மிகப்பெரிய எண்ணெய் இருப்பாக அமையும். இதை முன்னெடுத்துச் செல்லத் தகுதியான எண்ணெய் நிறுவனத்தை தேர்வு செய்து வருகிறோம். யாருக்குத் தெரியும், ஒருநாள் பாகிஸ்தான் இந்தியாவுக்கு எண்ணெய் விற்கலாம்” என தெரிவித்துள்ளார்.

இருப்பினும் ட்ரம்ப்பின் இந்தக் கருத்துக்கு பாகிஸ்தான் தரப்பில் இருந்து உடனடியாக எவ்வித கருத்தும் தெரிவிக்கப்படவில்லை.

மேலும், ட்ரம்ப் தனது சமூக வலைதளப் பதிவில் இந்திய, ரஷ்யப் பொருளாதாரங்களை ‘டெட் எக்கானமி’ (Dead Economies), அதாவது மிக மோசமான நிலையில், மீடக் முடியாத சூழலில் இருக்கும் பொருளாதாரம் என்று குறிப்பிட்டுள்ளார்.



### சகலதுறைவீரர்களுக்கான தரவரிசையில்

# மூன்றாம் இடத்துக்கு முன்னேறிய ஸ்டோக்ஸ்

சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் போட்டிகளுக்கான சகலதுறைவீரர்களுக்கான தரவரிசையில் மூன்றாமிடத்துக்கு பென் ஸ்டோக்ஸ் முன்னேறியுள்ளார்.

இந்தியாவுக்கெதிரான நான்காவது டெஸ்டில் 6 விக்கெட்டுகளைக் கைப்பற்றியதோடு 141 ஓட்டங்களைப் பெற்ற நிலையிலேயே ஆறாமிடத்திலிருந்து மூன்று இடங்கள் முன்னேறி மூன்றாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை, 1.இரவீந்திர ஜடேஜா, 2.மெஹிடி ஹஸன் மிராஸ், 3.பென் ஸ்டோக்ஸ், 4.வியான் முல்டர், 5.பற் கமின்ஸ்.

மேற்கூறப்பட்ட போட்டியில் 54 ஓட்டங்களைப் பெற்ற இந்தியாவின் றிஷப் பண்ட் துடுப்பாட்டவீரர்களுக்கான தரவரிசையில் எட்டாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி ஏழாமிடத்தையடைந்துள்ளார்.

இப்போட்டியில் 94 ஓட்டங்களைப் பெற்ற இங்கிலாந்தின் பென் டக்கெட், 15ஆம் இடத்திலிருந்து ஐந்து இடங்கள் முன்னேறி பத்தாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை, 1.ஜோ றூட், 2.கேன் வில்லியம்சன், 3.ஹரி ப்றூக், 4.ஸ்டீவ் ஸ்மித், 5.தெம்பா பவுமா, 6.கமிந்து மென்டிஸ், 7.றிஷப் பண்ட், 8.யஷஸ்வி ஜைஸ்வால், 9.ஷுப்மன் கில், 10.பென் டக்கெட்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை, 1.ஜஸ்பிரிட் பும்ரா, 2.ககிஸோ றபாடா, 3.பற் கமின்ஸ், 4.ஜொஷ் ஹேசில்வூட், 5.நொமன் அலி, 6.ஸ்கொட் போலண்ட், 7.மற் ஹென்றி, 8.நேதன் லையன், 9.மார்கோ ஜன்சன், 10.மிற்செல் ஸ்டார்க்.

இந்நிலையில், அவுஸ்திரேலியாவுக்கெதிரான இறுதி 3 இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளில் 45 ஓட்டங்களைப் பெற்றதோடு, 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய மேற்கிந்தியத் தீவுகளின் றொமாரியோ ஷெப்பர்ட், சகலதுறைவீரர்களுக்கான தரவரிசையில் ஆறாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி ஐந்தாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை, 1.ஹர்திக் பாண்டியா, 2.டிபேந்திர சிங் ஐரீ, 3.மொஹமட் நபி, 4.லியம் லிவிங்ஸ்டோன், 5.றொமரியோ ஷெப்பர்ட்.

இதேவேளை, மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான் இறுதி 4 போட்டிகளிலும் 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய அவுஸ்திரேலியாவின் நாதன் எலிஸ், பந்துவீச்சாளர்களின் தரவரிசையில் 15ஆம் இடத்திலிருந்து ஏழு இடங்கள் முன்னேறி எட்டாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை, 1.ஜேக்கப் டஃபி, 2.அடில் ரஷீட், 3.வருண் சக்கரவர்த்தி, 4.அகீல் ஹொஸைன், 5.அடம் ஸாம்பா, 6.வனிது ஹசரங்க, 7.ரவி பிஷ்னோய், 8.ரஷீட் கான், 9.நாதன் எலிஸ், 10.அர்ஷ்டீப் சிங்.

மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான இறுதி 4 போட்டிகளில் 154 ஓட்டங்களைப் பெற்ற அவுஸ்திரேலியாவின் ஜொஸ் இங்லிஸ், 15ஆம் இடத்திலிருந்து ஆறு இடங்கள் முன்னேறி ஒன்பதாம் இடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை, 1.அபிஷேக் ஷர்மா, 2.ட்ரெவிஸ் ஹெட், 3.திலக் வர்மா, 4.பில் ஸோல்ட், 5.ஜொஸ் பட்லர், 6.சூரியகுமார் யாதவ், 7.பதும் நிஸங்க, 8.டிம் செய்பேர்ட், 9.ஜொஸ் இங்லிஸ், 10.ஷே ஹோப்.

கரோலினா


# நீச்சல் வீரருக்கு காத்திருந்த அதிர்ச்சி

அமெரிக்காவை சேர்ந்த தென் கரோலினா பகுதியில் உள்ள ஆற்றில் வழக்கமாக நீச்சலடிக்கும் ஒரு நபருக்கு சமீபத்தில் மூளையை சாப்பிடும் அமீபா இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

சுகாதாரத் துறையினர் வெளியிட்ட அறிக்கையின் அடிப்படையில், அந்த நபர் கடந்த ஜூலை மாதத்தில் ஆற்றில் குளித்து விளையாடிக் கொண்டிருக்கும்போது அமீபா ஒன்று அவருடைய மூக்கு வழியாக நுழைந்து மூளையை அடைந்துள்ளது.

மாசுபட்ட தண்ணீர் உங்களுடைய மூக்கிற்குள் செல்லும்போது அது வழியாக அமீபா ஆல்ஃபேக்டரி நரம்பை பிடித்து உங்களுடைய மூளையை சென்றடைகிறது. அதன் பிறகு, இந்த அமீபா உட்புறமாக உங்களுடைய மூளையை கொஞ்சம் கொஞ்சமாக சாப்பிட ஆரம்பிக்கிறது. இதற்கான அறிகுறிகள் என்று வரும்போது தலைவலி, காய்ச்சல், குமட்டல், கழுத்தில் இறுக்கம், குழப்பம் போன்றவை அடங்கும்.

இந்த அமீபாவால் பாதிக்கப்படும் அபாயம் என்பது நீங்கள் எந்த இடத்தில், ஒரு வருடத்தின் எந்த சமயத்தில் தண்ணீரில் நீச்சலடிக்கிறீர்கள் என்பதை பொறுத்து அமையும். வெப்பமான கோடை மாதங்களில் இந்த அமீபா அதிக அளவில் காணப்படுகிறது.





கான்பேரா

### 14 வினாடிகளில்

# வெடித்துச் சிதறிய ரொக்கெட்

ஆஸ்திரேலியாவில் முதன்முறையாக விண்ணில் செலுத்தப்பட்ட ரொக்கெட், 14 வினாடிகளிலேயே விடித்துச்சிதறியது.

ஆஸ்திரேலியாவின் விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமாக கில்மர் நிறுவனம் செயல்படுகிறது. குயின்ஸ்லாந்து மாகாணம் யாடலா நகரை மையமாக கொண்டு செயல்படும் இந்த தனியார் நிறுவனம் அரசின் நிதியுதவிகளை பெற்று வருகிறது. இந்த நிலையில், நாட்டிலேயே முதன்முறையாக ரொக்கெட் ஒன்றை தயாரித்து விண்ணில் செலுத்த கில்மர் நிறுவனம் முடிவு செய்தது.

அதன்படி ‘எரிஸ்’ என்ற ரொக்கெட்டை தயாரித்தது. குறித்த நேரத்தின்படி இது நேற்று விண்ணில் ஏவப்பட்டது. கில்மர் நிறுவனத்துக்கு சொந்தமான ஏவுதளத்தில் இருந்து அந்த ரொக்கெட் விண்ணில் செலுத்தப்பட்டது.

கரும்புகையை கக்கியபடி விண்ணில் சீறிப்பாய்ந்த அந்த ரொக்கெட் 14 14வினாடிகளில் வானில் பறந்து கொண்டிருந்தபோதே வெடித்து சிதறியது. இதுதொடர்பாக விசாரணை நடத்தப்பட்டு மீண்டு வருவோம் என அந்த நிறுவனம் விளக்கம் தெரிவித்துள்ளது.



# சம்பியனானது சம்மாந்துறை பிரதேச சபை

வி.ரி.சகாதேவராஜா

“ஒரு ஆற்றல் மிக்க குடிமகன் ஒரு வெற்றிகரமான நாடு” என்ற அரசாங்கத்தின் விளையாட்டுk கொள்கையின் கீழ், இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சு விளையாட்டு வார நிகழ்ச்சித்திட்டத்தை ஏற்பாடு செய்திருந்தது.

ஜூலை 31ஆம் திகதி தேசிய விளையாட்டு தினத்துடன் இணைந்ததாக ஜூலை 26 முதல் ஜூலை 31 வரை நாடளாவியரீதியில் இத்திட்டத்தை செயல்படுத்தியிருந்தது.

அதனை முன்னிட்டு சம்மாந்துறை பிரதேச செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட சிநோகபூர்வ மென்பந்தாட்ட கிரிக்கெட் தொடரானது சம்மாந்துறை மத்திய கல்லூரி மைதானத்தில் புதன்கிழமை (30) நடைபெற்றபோது இறுதிப் போட்டியில் சம்மாந்துறை வைத்தியசாலை அணியை வென்று சம்மாந்துறை பிரதேச சபை அணி சம்பியனானது.

புதுடெல்லி

### ஆறு இந்திய நிறுவனங்களுக்கு

# அமெரிக்கா தடை



ஈரானுடன் வர்த்தகம் மேற்கொண்ட இந்தியாவின் 6 நிறுவனங்களுக்கு அமெரிக்காவில் தடை விதித்து அந்நாட்டு உத்தரவிட்டுள்ளது.

மத்திய கிழக்கில் மோதலை தூண்டிவிடுவதற்காக ஈரான் அரசு நிதியுதவி அளித்து வருவதாகவும் அமெரிக்காவுக்கு எதிரான பயங்கரவாத நடவடிக்கைகள் மேற்கொள்வதாகவும் குற்றச்சாட்டை முன்வைத்து, ஈரானுடன் யாரும் வர்த்தகம் மேற்கொள்ளக் கூடாது என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்திருந்தார்.

மேலும், ஈரானுடன் வர்த்தகம் மேற்கொள்பவர்கள் கடுமையான பின்விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று ட்ரம்ப் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இந்த நிலையில், ட்ரம்ப்பின் எச்சரிக்கையை மீறி ஈரானிடம் கச்சா எண்ணெய் மற்றும் பெட்ரோலிய பொருள்களை வாங்கிய 20 நிறுவனங்கள் அமெரிக்காவில் வர்த்தகம் செய்ய தடை விதித்து அந்நாட்டு வெளியுறவுத் துறை அறிக்கை வெளியிட்டுள்ளது.

இந்தியா, துருக்கி, இந்தோனேசியா மற்றும் ஐக்கிய அரபு அமீரகத்தைச் சேர்ந்த பல்வேறு நிறுவனங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

2024 ஜனவரி முதல் 2025 ஜனவரி வரையிலான காலகட்டத்தில் மட்டும் ஈரானுடன் இந்தியாவின் காஞ்சன் பாலிமர்ஸ் நிறுவனம் 13 இலட்சம் டொலர், அல்கெமிக்கல் சொல்யூஷன்ஸ் நிறுவனம் 8.4 கோடி டாலர், ராம்னிக்லால் எஸ் கோசாலியா &கோ நிறுவனம் 2.2 கோடி டொலர், ஜூபிடர் டை கெமிகல் பிரைவெட் லிமிடெட் 4.9 கோடி டொலர் வர்த்தகம் செய்துள்ளது. அதேபோல், குளோபல் இண்டஸ்ட்ரியல் கெமிக்கல்ஸ் லிமிடெட் மற்றும் பெர்சிஸ்ட் பெட்ரோகெம் பிரைவேட் லிமிடெட் நிறுவனங்களும் ஈரானுடன் வர்த்தகம் செய்ததாக தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே, வர்த்தக ஒப்பந்தம் இறுதி செய்யப்படாமல் இருப்பதால் ஆகஸ்ட் 1 (இன்று) முதல் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு 25 சதவிகிதம் வரி விதிக்கப்படும் என்று ட்ரம்ப் அறிவித்திருந்தார்.

தற்போது இந்தியாவை குறிவைத்து அமெரிக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

### கிழக்கு மாகாண 17 வயதுக்குட்பட்ட கைப்பந்தாட்டம்:

# வெற்றிவாகை சூடிய மட்டு. வவுணதீவு பரமேஸ்வரா

பேரின்பராஜா சபேஷ்

கிழக்கு மாகாண மட்ட 17 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான கைப்பந்தாட்டத்தில் மட்டக்களப்பு, வவுணதீவு பரமேஸ்வரா வித்தியாலயம் சம்பியனாகி வெற்றிவாகை சூடியுள்ளது.

பல சவால்களுக்கும, பல வளப்பற்றாக்குறைகளுக்கு மத்தியிலும் கிழக்கு மாகாணத்தில் உள்ள பல தேசிய பாடசாலைகளுடன் மோதி இச்சிறப்பான வெற்றியை வவுணதீவு பரமேஸ்வரா வித்தியாலய மாணவர் பதிவு செய்துள்ளனர்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 01, ஒகஸ்ட் 2025, இல.8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.